70

870

சாத்தியமா.

(ஒரு கூட்டுறவு நாடகம்.)

2854

2814

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 NOV 1937

டி. எல். ஆர். சந்திரன், ஐ.சி.எஸ்.
(கூட்டுறவு சங்கங்களின் உதவி ஜாயிண்ட்
ரிஜிஸ்திரார் எழுதியது.)

முதல் பதிப்பு.

காப்பிரைட் ரிசர்வ்ட்.

1937.

விலை அணா. 8.

"SADYAMA"

(A CO-OPERATIVE PLAY)

870

2814

894.8112

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 NOV 1937

BY

T. L. R. CHANDRAN, I. C. S.

(*Additional Joint Registrar of Co-operative Societies.*)

PUBLISHED BY

THE MADRAS PROVINCIAL CO-OPERATIVE UNION,

ROYAPETTAH, MADRAS.

1937.

All the Characters in the Play
Are Imaginary
and
The Events Fictitious.

இதில் உள்ள கதாபாத்திரங்களும் சம்பவங்களும்
கற்பனைகளே தவிர உண்மையல்ல.

All rights reserved by the author.
Applications for permission to stage the play or make cinematograph film should be made to him.

To the memory of
my father Late Dewan Bahadur
T. R. Lakshmana Perumal Pillai Avl., L.M.S.,
Civil Surgeon and Viceroy's Honorary Assistant Surgeon;
who devoted his life to the service
of the sick and the poor.

கல்வியும் செல்வமும் கண்ணிய வாழ்கையும்
பல்வித வுலகினில் பழகும்நற் பான்மையும்
ஏழைக் கிரங்கும் இனியநல் நேர்மையும்
தோழமைக் கியைந்த தூய்மையும் ஒழுக்கமும்
தாய்தனிப் போலெனுந் தயவுகொள் தன்மையும்
நோய்நிலை ஈதென ஆய்ந்துணர் வன்மையும்
பூண்ட வைத்திய பூஷணன் னிவனென
யாண்டும் புகழ்ந்திட அரியபேர்பெற்ற என்தந்தை
இந்தநல் நூலினை இனிதுவந் தர்பணம்
செய்தனென் அன்னவன் திருவடிமலர்முடி
எய்தவே பணிந் திக முறவே.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 NOV 1937

FOREWORD.

I am glad to write an introduction for Mr. Chandran's play, as I am very much in favour of increasing and spreading Co-operative propaganda. People are still too much inclined to think that co-operation exists in order that they may be given cheap loans and it is imperative to insist on the non-credit side, for co-operation can and should touch every activity of the ordinary man and woman.

The author has wisely blended humour with his propaganda in the play. I trust it will be widely played and will open the people's eye to the real purpose of Co-operation.

T. AUSTIN,
Registrar of Co-operative Societies.

MADRAS,
17th Sep. '37.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 NOV 1932
MADRAS

காட்சிகள்.

ஆக்ட் I. காட்சி 1.—சென்னையில் ஆநந்த ராவ் வீடு.
,, 2—ஒரு தெரு.
,, 3—பாரிஸ்டர் சுந்தரத்தின் பங்களா.
,, 4—ஒரு தெரு.
,, 5—டிரஸ்டு ஆபீஸ் ஹெட் குமாஸ்தா வீடு.
,, 6—ராமன் குடியிருக்கும் வீடு.
,, 7—கடற்கரைச் சாலை.
,, 8—கடலோரத்தில் வேறிடம்

II. ,, 9—சென்னையில் ஸெனேட் ஹவுஸுக்கு முன்புறம்.
,, 10—சென்னையில் ஹைக்கோர்ட் வக்கீல்கள் இருக்குமிடம்—முன் தாழ்வாரம்.
,, 11—வக்கீல் ஸ்ரீநிவாஸய்யர் ரூம்.
,, 12—பாரிஸ்டர் சுந்தரத்தினுடைய அறையின் முன்புறம்.
,, 13—சென்னையில் முருகேச முதலியாருடைய சத்திரம்.

III. ,, 14—ஸ்ரீபுரம் ஜமீன்தார் பங்களா.
,, 15—சென்னையில் கூட்டுறவுச் சங்க நிலையம்.
,, 16—ஸ்ரீபுரம் —— கிராமச்சாவடியில் முற்புறம்.
,, 17—சென்னையில் கூட்டுறவுச் சங்கக் காபிஹோட்டலின் முன் வாசல்.
,, 18—டி காபி ஹோட்டலில் வேறுபக்கம்.
,, 19—கிருஷ்ணசாமியின் வீடு.
,, 20—சென்னையில் கோவாபரேடிவ் ஹோட்டல்.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

காட்சி 1.

இடம்: சென்னையில் பெல்ஸ் ரோடில் ஆநந்த ராவ் வீடு.

காலம்: காலை.

ஆநந்த ராவ் ஆபீசுக்குப் புறப்படுகிறுர். வேலைக்காரன் மாரி முத்து தபால் கொண்டுவந்து தருகிறுன். ஆநந்த ராவ் வாங்கிப் பிரித்துப் படிக்கிறுர். படிக்கும்போதே பெருமூச்சுவிட்டுத் தலையை அசைக்கிறுர். படித்து முடிந்ததும் அக்கடிதத்தை மேஜைமே லெறிந்துவிட்டு—"மாரிமுத்து"! என்று வேலைக்காரனை யழைத்து—"மணியார்டர் ஒன்றும் வரவில்லையா?—என்று கேட்கிறுர்.

மாரிமுத்து: இல்லைங்கையா!—(போகிறுன்).

ஆநந்த ராவ்: (தமக்குள்) பணமனுப்பி உதவிசெய்யும்படி எழுதிய எனக்கு, "செட்டாய்ச் செலவிட்டிருந்தால் ஏனிந்தக் கஷ்டம்?" என்று புத்தி சொல்லுகிறுள் பெற்ற பெண்! பிள்ளை யாவது பெண்ணுவது, எல்லாம் வீண் பிரேமை! "உண்டானபோது ஒரு கோடி உறவு! என்பார்கள்! அது சரியாயிருக்கிறது!. (நாற் காலியிலமர்ந்து கடிதத்தைப்பிரித்துப் பழையபடி பார்த்து)—முதலில் என் புருஷனுடைய அநுமதிவேண்டும்! அது கிடைத்துப் பணம் அனுப்பினல்—குடும்பத்தில் சச்சரவேற்படும்போலிருக்கிறது. நானென்ன செய்யட்டும்? (கடிதத்தை மேஜையிலே போட்டுவிட்டு எழுந்து உலாவியபடி) ஆஹா! இந்த பெண்ணை வளர்த்த அருமை யென்ன? வாழ்க்கைப்படுத்திய வைபவமென்ன?—இப்பொழுது—(மௌனம்) ஆஹா! (துக்கத்தை அபிநயித்தபடி) பெண்தான் இப்படி யென்றுல்—வளர்த்து—படிக்கவைத்து—கல்யாணம் செய்வித்து—விழாதவன் காலிலெல்லாம் விழுந்து படாதபாடெல்லாம் பட்டு உத் யோகமும் செய்வித்த தகப்பனுரை—பிள்ளை—ஆதரிக்கக் கடமைப் பட்ட பிள்ளை—இலட்சியம் செய்யவில்லையே! எத்தனை கடிதம் எழுதுவது பணத்திற்கு? பதிலே கிடையாது (பெருமூச்சு) பாங்கும் சரிவர நடக்கவில்லை—ரிட்ரஞ்ச்மெண்டு நடக்கும்போலிருக்கிறது; என்னசெய்யலாம்? (கடிகாரத்தை கவனித்து) நேரமாயிற்று!

நடப்பது நடக்கட்டும்! ஆகும்பொழுது அவளோடாகும்! போகும் பொழுது அவளோடு போம்—என்பது பொய்யாவதில்லே!

மாரிமுத்து: ஐயா, அம்மா வருவதாகக் கடிதமெழுதியிருக் காங்களா?

ஆநந்த ராவ்: (வெறுத்தபடி) சை—இல்லே போ! இந்தக் கழுதை—மீனு!

மாரி: குளந்தை மீனும்பாளா?

ஆநந்த: ஆமாமா!

மாரி: வாராங்களாங்காட்டியும்!

ஆநந்த: என்னத்துக்கு? பிராணனே வாங்குவதற்கா? வாங் கினதெல்லாம் போதாதா?

மாரி: (வெளியேபோய்ப் பார்த்துவந்து) ஐயா, (மெதுவாய்) ஸௌகார் மூஸாலால்—(பார்த்து) அவர்கூட கோர்ட் அமினுவைப் போலிருக்கிறது. அவரும் வாரு—(பார்த்து)—அமினுதானுங்கோ!

ஆநந்த: அப்படியா! (மெதுவாய்) சீக்கிரம் கதவைச் சாத்து! தட்டிக் கூப்பிட்டால், ஐயா வீட்டிலில்லேயென்று சொல்லிப் பக்குவ மாய் அனுப்பிவிடு. நான் இப்படியே புழைக்கடை வழியாய் ஆபீ ஸுக்குப் போய்விடுகிறேன்! தொலேயட்டும் தடியன்.

(போக யத்தனிக்கிருன். மாரிமுத்து கதவைச் சாத்துகிருன். கதவைத் தாளிட்டதும் சௌகார் கதவைத் தட்டுகிருன்.)

மாரி: யார்?—யாருங்க?

ஸௌகார்: நான்தான்!

மாரி: நான்தான்! பேரில்லேயா? ஊரில்லேயா?

ஸௌகார்: நான்தானப்பா? கதவைத்திற—

மாரி: கதவைத் திறக்கமாட்டேன்! பேர்சொன்னுல்தான்—கதவைத் திறப்பேன்!

ஸௌகார்: நான்தான் ஸௌகார்!

மாரி: ஐயா இல்லே வூட்டே! ஆபீஸுக்குப் போயிட்டாரு!

ஸௌகார்: அடே, பொய் சொல்லாதே! இப்போ பேச்சு குரல் கேட்டுது! இல்லே என்கிருயா?

மாரி: (கோபத்துடன்) ஆமா! பொய்தான் சொல்றேன்-- கதவைத் திறக்கமாட்டேன்.

(பழையபடி பலமாய்த் தாளிடுகிறுன்).

ஸௌகார்: (பலமாய்) கதவை திறக்கமாட்டே? திருட்டு வேலே வேண்டாம்! கதவை திற—(தட்டுகிறுன்).

ஆனந்த: கோபத்துடன் வந்து) ஏனையா? (என்று உரத்த குரலில் கேட்டபடி கதவை திறந்துபார்த்து) நீயா! வா!

ஸௌ: ஏனையா—ஊட்டுக்குள்ளிருந்துக்கிட்டே இல்லே என் கிறே!

ஆனந்த: நான் ஆபீஸுக்குப் புறப்படுகிறேன்! நேரமாச்சு— யாரேனும் வந்து தொந்தரவு செய்யப்போகிறுர்களே என்றெண்ணி அப்படிச் சொல்லச் சொன்னேன்!

ஸௌ: என்ன! (வீட்டுக்குள் பிரவேசிக்கிறுன். அவனுடன் அமினு முத்துப்பிள்ளேயும் பிரவேசிக்கிறுன்).

ஆனந்த: (பார்த்து) ஓ! முத்துப்பிள்ளேயா?—வா—(பெரு மூச்சு).

முத்துப்பிள்ளே: ஆனந்த ருவ்! ஸௌகாருக்கு நீங்க தர வேண்டிய கடன் பாக்கிக்காகக் கோர்ட்மூலம்—ஜங்கம சொத்துக் களே எடுக்க வாரண்டு கொண்டுவந்திருக்கிறுர்.

ஆனந்த: ஓகோ! (ஸௌகாரைப்பார்த்து) ஸௌகார், உன் புத்தியை—அல்ப புத்தியை—வட்டி வாங்கித்தின்கிற புத்தியை— இரக்கமற்ற புத்தியைக் காட்டிவிட்டாயே! கொஞ்சம் பொறுக்கப் படாதா? ஒருமாதகாலம்தானே தவணே கேட்டிருந்தேன்.

ஸௌ: சை! என்ன மனிசனையா நீ! எத்தனே கெடு? எத்தனே சத்யம்? சே! நீ கெட்டே! வாயை மூடு! போதுமுன் நியாயம்—(அமினுவைப் பார்த்து) உன் வேலேயை நடத்து!

ஆனந்த: ஸௌகார்! வேண்டாம்! கவனி! நீ கொடுத்த முதலுக்கு ஐந்து மடங்கு மேலே வட்டி சாப்பிட்டிருப்பாய்— இல்லேயா? இதை நினேச்சுப்பாரு! தெய்வத்துக்குப் பயப்படு! ஏழை யைக் கெடுக்காதே!

ஸௌ: ஒன்றும் பேசாதே (காதைப் பொத்திக்கொண்டு) வேண்டாம்! வேண்டாம்! உன் நியாயம்! அமீனு!—(சொத்தை எடுப்பதற்கு சாடை செய்கிறுன்).

அமீனு : (சொத்தை எடுப்பதற்கு யத்தனப்பட்டுக்கொண்டே) ஆநந்த ராவ்! நான் என்னசெய்யட்டும்?

ஆநந்த : (தடுத்து) இந்தப்பாவிக்குப் புத்திசொல்லப்பா கொஞ்சம்! நானுனக்கு இந்த அமீனுவேலே செய்துவைக்க எவ்வளவு பாடுபட்டேன்! கவனி அதை!

அமீனு : இவன்களுக்கு யாரால் புத்தி சொல்ல முடியும்? கேட்கக்கூடியவனு?

ஸேள : (அமீனுவை நோக்கி) ஓய்! ஏனையா தாமசம்?

(அமீனு சாமான்களை எடுக்கப்போகிறுன்)

மாரி : (ஓடிவந்து அமீனுவைப் பார்த்து) ஏனையா இந்த எளவு உத்யோகத்துக்கு வந்தே? இதைவிடச் சுமை தூக்கலாமே!

அமீனு : மடையா! உன்னை யார் கேட்டது? (குத்தப்போகிறுன்).

ஆநந்த : மாரிமுத்து, நேமாச்சு—சண்டை வேண்டாம். இவர்களிருவரையும் வெளியே அனுப்பிக் கதவைச்சாத்து!

(மாரிமுத்து அவர்களை அனுப்பப் பார்க்கிறுன். அவர்கள் மீறுகிறுர்கள். முடிவில் மாரிமுத்து வெளியே பிடித்துத்தள்ளி கதவைச் சாத்துகிறுன்.)

ஸேள : (பலமாய்) அடே ராவ்! இந்த வேலே செய்தே! உன்னை ஜயிலுக்கனுப்பிவிட்டு மறுவேலே பார்க்கிறேன்! வா—ஐயா!

(போகிறுர்கள்).

———

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 NOV 1937
MADRAS

காட்சி 2.

இடம் : தெரு.

காலம் : காலே.

அமினு : மாரிமுத்து பலே முண்டன்!—தள்ளவே—மீற முடியவில்லே.

ஸௌ : (இரைந்து) இவனைப்போல் எத்தனே பேருடைய கொழுப்பை அடக்கியிருக்கிறேன். இவனுடைய ஆட்டத்தை அடக்க முடியாதா! பார்க்கிறேன்.

வழிப்போக்கரில் ஒருவன்: ஏ ஸௌகார், உனக்குக்கொடுத்துக் கொடுத்து நொந்துபோனுன் ராயன் பாவம்! இன்னுமேன் சாவடிக் கிறே அவனே ?ஏன் ஐயா—இந்தப் பாழாப்போன துட்டுமேலிருக்கிற ஆசை உனக்கு உன் புள்ளேகுட்டி மேலேகூட இருக்காதுபோலே இருக்கே—

ஸௌ : அட போவே நம்ப புள்ளே இருந்தா — அவன் பகல்லே மாத்திரம் தானே உழைச்சு சம்பாரிக்கமுடியும்—பணத் தைப்பாரு—ராவு பகல் இரண்டுவேளேயும் குட்டி போட்டுக்கினே இருக்கும். போவோய் வாயை மூடிக்கொண்டு வழியோடே! புத்திபோதும்.

வழிப் : அந்தப்பாப்பான் உன்னே வெளியே தள்ளியதோடு விட்டான். நானுயிருந்தால்—சவுக்கினுலே முதுகுத்தோலே உரித் திருப்பேன்—ஆயிரக்கணக்கான மைலுக்கப்பாலிருந்து வந்தான்—ஆர்ப்பாட்டம் பண்ணுகிருன்—உங்க கொழுப்பெல்லாம் அடங்கும் காலம் வந்துவிட்டது. பொறு பொறு.

ஸௌ : ஓ! முதுகுத்தோலே எடுப்பே! உன் குடுமியைப் பிடிக்க வழிதெரியுமெனக்கு! பார்க்கிறேன்.

வழிப் : என்னடா பார்க்கிறேன்? (கையை ஆட்டி) நீ இந்த ஊரிலே குப்பை கொட்டமாட்டாய் இனி!—

(சண்டை பலக்கிறது—கைச்சண்டை கலக்கும் சமயம்).

வழியில்வந்த ஒருவர் : ஏனையா சண்டை? ஏ ஸௌகார்! நீ கூட ஏன் இந்தவேலே வச்சிக்கிறே!

(விலக்கிவிடுகிருர். ஸௌகார் முணுமுணுத்துக் கொண்டே போகிருன்.)

காட்சி 3.

இடம் : பாரிஸ்டர் சுந்தரத்தினுடைய பங்களா.—

(குமாஸ்தா அண்ணுசாமி புத்தகங்களை அடுக்கிவைப்பதும் தூசி களைத் துடைப்பதுமாயிருக்கிருன்.)

அண்ணுசாமி ; (தனக்குள்) பொழுதுபோனு பொழுது வந்தா புஸதகத்தை அடுக்கிவைச்சு அழகு பாக்கறதோடே சரி. கக்ஷிக் காரன் எவனும் வாவழியைக் காணும். என்னமா வருவான்; எப் படி வருவான்? சீமைக்குப் போய்விட்டு வந்தாலும்வந்தார் தொழி லிலே சுருசுருப்பு கிடையாது பேர்வழிக்கு. (Touting) (தாகு) கூடா தாம். அப்பறம் வக்கில்வேலை எனனத்துக்குங்கிறேன். போரும் போராத்துக்குப் பாழாய்ப்போன கிருஷ்ணசாமி ஒத்தன்! அவன் ஸ்நேகம் இருக்கிறவரைக்கும் இந்த ரேஸ்கிளப் (குதிரைப்பந்தயம்) சூதாட்டம் ஒண்ணும் விடப்போரதுமில்லே; சுந்தரம் உருப்படப் போறதுமில்லே. கோர்ட் வாராண்டாவுக்குப் (தாழ்வாரத்துக்கு) போனு—பஸ் கண்டக்டருங்க மாதிரி மடியைப்பிடிச்சு இழுக்கிரு னுங்க 'கேஸ்ஸை எங்கிட்டக்கொடு' 'எங்கிட்டக் கொடு 'ன்னு. அந்த வக்கீலுங்களுக்குன்னு பணத்தின் அருமை தெரியும். தகப்ப ஞர் பணம் அனுப்பறத்தை நிறுத்தினு—அப்போ தெரியும் ஐயாபாடு —ஹூம்.

(கட்சிக்கார நாயுடு ஒருவர் பிரவேசிக்கிருர்)

நாயிடு ; ஐயா என் அப்பீல் இன்னைக்கு ஈறங்கியாச்சே! பாரிஸ்டரய்யா எழுந்தூட்டாங்களா?

அண்ணுசாமி : இதோ பாருங்கோ நாயிடுகாரு, நேற்றுராத்திரி ரொம்ப நாழிவரைக்கும் உங்க கேஸைத்தான் வைச்சிண்டு—திருப்பித் திருப்பிப் புஸ்தகத்தைப் பாக்கிறதும் 'நோட்ஸ்' எடுத்துக்கிறதுமாய் —ரொம்ப சிரமப்பட்டிருக்கார் வக்கீல்—போங்கோ··· ஆச்சு எந்தி ருக்கிற சமயந்தானே; அனேகமாய் எழுந்து ஸ்நானம் செய்கிருர் என்று நினைக்கிறேன்; இதோ வந்துவிடுவார்.

நாயிடு : என் ஐயா, நேற்று ராத்திரி நான் வந்து 11 மணிக்குக் கேட்டப்போ—ஐயா கிளப்பிலே இருக்காருன்னு சொன்னுனே வேலைக்காரன்—எப்போ ஐயா படிச்சுப்பாத்தாரு என் கேஸை?

அண்ணுசாமி : (Scratching his head) தலையைச் சொரிந்து கொள்கிருன்.)

நாயிடு: என் ஐயா, நம்பர் கட்டுமேலே நான் போட்ட முடிச்சு அப்படியே இருக்கே! எந்தக் கேஸை ஐயா பாத்தாருன்னே!

அண்ணு: இல்லே, இல்லே—நிச்சயமா—உங்க கேஸ்தான். வக்கீலையா திரும்பியும் அதேமாதிரி அடுக்கிக் கட்டியிருப்பாருன்னு நினைக்கிறேன். அதோ அதோ, ஐயா இறங்கி வாராப்போல இருக்கே!

நாயிடு: அடே போய்யா, சமையல்காரன்லா வர்ரான்—(பார்த்து) என் சமையற்காரய்யா—ஐயா, என்ன பண்ருரு?

சமையற்காரன்: தூங்கருங்க!

நாயிடு: என்ன குமாஸ்தா ஐயா நீ! பெரிய தகல்போலே இருக்கே! என் ஐயா கூசாதே பொய் சொல்றே! கேஸ் கட்டை எங்களிடமிருந்து வாங்கறவரைக்கும் நுழைநரி மாதிரி எங்க வக்கீல் 'இந்த்ரன்! சந்த்ரன், கோர்ட்டில் இருக்கிற ஜட்ஜுங்கள்ளாம் எங்க வக்கீலய்யா ஸ்நேகம்! எங்ககிட்ட கொடுத்த கேஸ் நிச்சயம் ஜயந்தான்! அப்படி இப்படி' என்று பேசி, கட்டைக் கையிலே வாங்கிக்கிண்டு இப்படிக் கஷ்டப்படுத்துறயே! இது நியாயமாய்யா உனக்கு? என் ஐயா எங்ககிட்டேருந்து பிடுங்கிற காசிலே வக்கீலுக்கு ஏதேனும் கண்ணிலே காட்டுவாயோ என்று சந்தேகம். உங்கிட்ட கொடுத்த கேஸ் உருப்பட்டாப்போலதான்! கட்டைக் கொண்டா—நாயிஞ.

(அண்ணுசாமி தயங்குகிருன். நாயுடு கட்டைப் பிடுங்கிக்கொள்கிருன்).

அண்ணு: ஏய் நாயுடு, கோர்ட் தஸ்தாவேஜைத் தொடாதே 'கீழே வை' உன்னைச் சும்மா விடமாட்டேன் பாரு!

நாயிடு: ஆம் கிச்சுப்புட்டே போவே!

(போகிருன்)

அண்ணு: வருஷத்திற்கு ஒரு கேஸ் தப்பித்தவறி வந்துட்டா அது போறகதி இப்படியிருக்கு—அவர் சுகபுருஷன்; ஊரிலேயிருந்து பணம் வந்துடறது; கவலையில்லே—நான் என்னபண்ணறது—பிள்ளை குட்டிக்காரனுச்சே! நாலுகேஸ் வந்தால்தானே நமக்கு something (ஏதாவது) கிடைக்கும்! இதென்ன கஷ்டகாலம்—ஐயா—

(சுந்தரம் பின்புறமிருந்து வருகிருன்) (Enter Sundaram in Pyjamas).

சுந்தரம் : (வந்ததும்) அண்ணசாமி, இன்னிக்குக் கேஸ் ஏதாவது இருக்கா என்ன ?

அண்ண : பல்கில் தேச்சுட்டு மெதுவா வாங்கோ—நமக்கு என்னத்துக்குன்ன கேஸ்—இருந்தா—தொந்தரவு—முதல்தேதியானதும் தவருமல் பணம்வந்துடறது அப்பாகிட்டேருந்து; நமக்கென்ன கவலே—Practice (ப்ராக்டிஸ்) Practice (ப்ராக்டிஸ்) எங்கேயிருந்து வரும்? எப்போப்பாத்தாலும் Tea Party (டி பார்டி) Race Party (ரேஸ் பார்டி) Club Party (கிளப் பார்டி) லேயே யிருந்தா—ஏழரை நாட்டுச் சனியா வந்திருக்கான் கிருஷ்ணசாமி ஒருத்தன். அப்பா பணம் விரயமாரது நன்ன இல்லேன்னு நான் என்னசொல்லி என்ன பிரயோஜனம்—எனக்கென்ன—இது ஸ்வர்க்கமா என்ன—ஏதோ உங்க தகப்பனர், புண்யவான்! அந்த காலத்திலே கைத்தூக்கி விட்டார்; உங்களேயும் சின்ன வயசிலிருந்தே தெரியும்; ஏதோ செய்த நன்றி மறக்காதே இங்கே ஒட்டிண்டு இருக்கணுங்கிறதே தவிர எனக்கு இங்கே வேறென்ன இருக்கு.

பெரிய பெரிய வக்கீல்கள்கூட அவாவா குமாஸ்தா பேச்சைக் கேட்டுண்டுதான் இருக்கா! நான் முட்டிக்கிறேன் ஜட்ஜுகளுக்கு அடிக்கடி Tea Party (டி பார்டி) கொடுங்கோன்னு—கொழுத்த பணக்காரங்களா கக்ஷிக்காரங்களேப்பிடிக்க Tout (தாகு) கூட இருக்கணம்னு — அதெல்லாம் சொன்ன—அதேது! இங்கே Principle (நியாயம்) மேலே கூடவே கூடாதுங்கிறீங்க—நடக்கிற Tea Party (டி பார்டி) கிருஷ்ணசாமிக்கின்ன — Race—Club க்கு—Tout ஆ அவன்ன இங்கே வரான்—ஊம்.

இதோ வந்துட்டுப்போற Client (கக்ஷிக்காரன்) ரொம்ப Influence (செல்வாக்குடையவன்) உள்ளவன்னு அவனே எப்படியோ வலேவீசிப் பிடிச்சுண்டு வந்தேன்; பொறுத்தான் பொறுத்தான் அப்படிப் பொறுத்துப்பாத்தான் கடைசியிலே கட்டைப்பிடிங்கிண்டு போய்ட்டான்.

சுந்தரம் : (ஆச்சரியத்துடன்) எப்போ! எப்பொ!! —

அண்ண : எல்லாம் நீங்கள் எழுந்துவாத்துக்கு முன்னடியே—என்ன—இந்த போர்ட் (Board) ஒண்ணு தொங்கறது அநாவச்யம்னு தோன்றது.

சுந்தரம்: சரி—சரி—போறும்—உன் முணுமுணுப்பு—இரு —இரு—அதோ யாரு என் Old class-mate (பள்ளிக்கூடத் தோழன்) ராமனு வரான்?

அண்ணு: ஹூம் எனக்கென்னவந்தது? (தனக்குள்) Class-mate (பள்ளிக்கூடத் தோழன்) க்கென்ன—மந்தை—மந்தையாய் வரானுங்க! இவன் இன்னொரு கிருஷ்ணசாமிபோலிருக்கு—(ராமனைப் பார்த்து) ஸ்வாமி, வாருங்கோ! Barrister (பாரிஸ்டரய்யா) உங்களுக்காக வழிபார்த்துக்கொண்டே இருக்கிறார்.

சுந்தரம்: Hallo—Ramu (ஹலோ ராமு) How-long (எவ்வளவு நாளாச்சு) Shake hands (கை குலுக்குதல்) வா—வா—I am delighted to meet you old boy—(பழைய நண்பனுகிய உன்னை சந்திப்பதில் சந்தோஷப்படுகிறேன்).

ராமன்: எவ்வளவு நாளாச்சு பாத்தயா சுந்தரம் நாம் Meet (சந்தித்து) பண்ணி. How and where are your parents. Sundar? (சுந்தரம் உன்னுடைய பெற்றோர்கள் எங்கிருக்கிறார்கள் சௌக்கியமா)?

சுந்தரம்: சமஸ்தானத்தில் க்ஷேமமாயிருக்கிறார்கள். நீ எப்படி இருக்கே; என்ன பண்ணிண்டிருக்கே அப்பா—

ராமன்—அதான்—I took my M. A. degree in Economics—I got the all College and University Medals (நான் எம். ஏ. பாஸ் செய்திருக்கிறேன்; காலேஜிலும் யூனிவர்ஸிடியிலும் மெடல்கள் பெற்றிருக்கிறேன்). கொஞ்சநாள்— Research Scholar (ஆராய்ச்சி மாணுக்கனு) ஆயிருந்தேன்; வேலைக்குத்தான் பாரு— Communal Rotation in Services (ஜாதிவீதாசாரப்படி உத்தியோகம்) கொடுத்தல் — சொன்னு சிரமமாயிருக்கு — உம்—உன் Practice—என்ன ரொம்ப பலந்தானே?

சுந்தரம்: என்ன—Practice-ஆ—நன்னுயிருக்கு போ, பட்டணத்திலே சந்துவிடாதே போர்டுக்குக் கீழே போர்டு தொங்கவிட்டுண்டு ஊரை வளைச்சுண்டு உட்கார்ந்திருக்கானுங்க; உனக்குத்தான் தெரியுமே என் Temperment (குணம்) I hate under hand dealings—(அடி வெட்டு) tale bearing (கோட்சொல்லல்)'.touting (தரகு) and the like (இவை போன்றவை) ஆனுல் இதெல்லாம் செய்ற பசங்கள்தான் முன்னுக்கு வரானுங்க இந்த காலத்திலே

—ஏதோ நம்ம family prestige—(குடும்ப கௌரவத்தை)யை முன்னிட்டு இந்த வழிகளில் இறங்க மனசு வரமாட்டேன் என்கிறது.

ராமன் : ஆனுக்க உனக்கு ரொம்ப Influence (செல்வாக்கு) இருக்குன்னு கேள்வி — ஸந்தோஷம்—ஏன் அப்பா— எனக்கு— ஏதாவது ஒரு வேலைக்கு சிபார்சு செய்யமுடியுமா ?

சுந்தரம் : என்னாலே என்ன செய்யமுடியும் ராமு ! நமக்கு வாய்த்த ஸ்நேகிதங்கள் எல்லாம் வெறும் - parasites (ஒட்டுண்ணி) ஆ இருக்கானுங்க ! அதுக்கென்ன வந்து —Tea, Dinner (டி-டின்னர்) சாப்பிடரத்துலே குறைச்சலா இருக்கானுங்களா—இல்லே—promises (வாக்குக் கொடுப்பதிலே) தான் குறைவா—எல்லாம்—காரியம்னு வரப்போ—பசங்க இருக்கிற இடம் தெரியவில்லே — உம்— இருக்கட்டும்—எங்கேயாவது பார்க்கலாம்—By the By—(இரு— இரு) உங்க தாயார் எங்கே இருக்காக ?

ராமன் : இங்கேதான் அப்பா— என்னோடேதான் !

சுந்தரம் : உம் (ஆச்சரியத்துடன்) சுந்தரி எப்படி இருக்கா ?

ராமன் : Sundari has taken her degree--(சுந்தரி பி ஏ. பாஸ் செய்திருக்கிறாள்) என்ன பிரயோஜனம் அப்பா ? எங்கே போனாலும் Madras (சென்னை) இலே இருக்கிற Big people's —recommendation (பெரிய செல்வாக்குள்ளவர்களுடைய சிபார்சுகள்) இல்லாட்டா—போர இடமெல்லாம் No vacancy (காலி இல்லை) தான். தவிர சுந்தரிக்கு அவ்வளவு—push (தைர்யம்) இருக்கிறதா காணோம்—She is rather shy (தவிர கொஞ்சம் வெட்கப்படுகிறாள்) நிஜம்மா சொல்றேன். இப்போது எனக்கு வாராத கஷ்டங்கள் வந்தன — நிஷ்டூரங்களும் பாக்கியில்லை.

சுந்தரம் : ஊ ஹூம்—சுந்தரி பி. ஏ. பாஸ்பண்ணிவிட்டாளா? பேஷ் ; She must be a fine girl (அவள் ஒரு நல்ல பெண்ணா இருக்கவேண்டும்) ராமு கொஞ்சம் காபி சாப்பிடேன் (Take coffee) என் அப்பா நம்ப நடேசன்—அதான் நாமெல்லாங்கூடப் பரிகாசம் செய்வோம் பாரு, அவன் என்னப்பா பண்றான்.

ராமன் : அந்த eccentric fellow — (வெறியன்) Degree (பட்டம்) வாங்கிவிட்டான்—சும்மா தான் இருக்கான்.

சுந்தரம் : What about Venkataraman and Gopal ? வெங்கட்டராமன் கோபால் இவர்களெல்லாம் என்னசெய்கிறார்கள் ?)

ராமன்: Ditto—(மேற்கண்டபடி) Degreeயை வாங்கிக்க வேண்டியது— பீச்சாங்கரைக்குப் போகவேண்டியது— Queen Mary's College முன்னாலேயே டாரய்ச்சுண்டிருக்க வேண்டியது தான்—வேறே வேலே ?

சுந்தரம்: Poor fellows! (பாவம்) பசங்களெல்லாம் பார்த்து நாளாச்சு—நாம் நாளேக்கு Dinner (சாப்பாடு) க்கு எல்லாரையும் கூப்பிடலாம் அவுங்க அட்ரஸ் எல்லாவற்றையுங் கொடு— ஆமாம் What about your sister? (உன்னுடைய தங்கையைப் பற்றி என்ன)

ரரமன்: ஆ—அவள் என்னத்துக்கு அப்பா—அவள் ரொம்ப —shy (வெட்கப்படுகிறவள்) அதையுந்தவிர to speak the truth proper dress (உண்மையில் சரியான உடை) கூட இல்லே.

சுந்தரம்: What a pity! (என்ன பரிதாபம்) நான் உன் வீட்டுக்கு வரேன் அப்புறம் பார்ப்போம்.

ராமன்: சுந்தரம் What about a job? (வேலேயைப்பற்றி யென்ன) நீ ஒண்ணும் வித்தியாஸமாய் நினேக்காதே; கஷ்டம் அப்படிக் கேட்கச்சொல்றது.

சுந்தரம்: சே—சே—அதனுலென்ன? என்னுல் முடிஞ்ச வரைக்கும் சிரமப்பட்டுப் பார்க்கிறேன் ராமு கவலேப்படாதே.

ராமு: —புறப்படலாமா—நாழியாறது—

(இருவரும் எழுந்திருக்கிருர்கள்).

சுந்தரம்; (தாழ்வாரத்துக்கு வெளியே வந்து) ராமு, don't forget to-morrow 8 P. M. Cheerri—ho. (மறந்துவிடாதே— நாளேக்கு ராத்திரி 8 மணிக்கு)

(போய்வருகிறேன்).

காட்சி 4.

இடம் — தெரு.

Ananda Rao's Soliloquy.

(ஆநந்த ராவ் தன்னோடு தான் பேசுதல்).

ஆநந்த ராவ்: ஆஹா—பெருமையோடு வாழுங் காலத்தில் நண்பர் பலர் பலாப்பழத்தில் ஈ மொய்ப்பதுபோல் உறவாடினர், சிறுமையடைந்த இந்தக் காலத்தில் சொந்த மக்களும், நம்மைத் தவிக்கவிட்டோடுகின்றனர். உலக இயல்பு இதுபோலும்! ஆஹா! இப்படித் துன்பம் தொடர்ந்தா வரவேண்டும்?—உத்யோகம் போய், மார்வாரி கையில் மாட்டிக்கொண்டு, அவனைத் தாக்கிய குற்றத்துக்கு சிறைவாச அநுபவமும்—பாழும் சிறையில் பட்ட அவஸ்தை கொஞ்சமா? அது பெரிதாகத் தெரியவில்லை. விடுதலை யடைந்த பின் வயிற்றுக்கு வழியில்லாமல் படும் அவஸ்தை பொறுக்கமுடியவில்லையே! அடடா! என்னென்று சொல்வதிதை? நகர அபிவிர்த்தி சபை (City Improvement Trust) ஒரு உத்யோகத்துக்குக் கமிஷனரைப் பார்க்கலாம் என்று போனால், துவார பாலகன் உள்ளே விட மறுத்துவிட்டானே! அவன் ஆர்ப்பாட்டம் பெரியதாயிருக்கிறது! ஆஹா! என் கையில் இரண்டு வெள்ளைக்காசு இருந்தால் அந்தப்பயல் பல்லை இளித்துக்கொண்டு முதல் பேட்டிக்கு என்னையழைத்துப் போயிருப்பான் அல்லவா? உம்! இனிமேல் சில்லறைத் தேவதைகளைத்தான் போய்ப் பார்க்கவேண்டும். Manager யை (மானேஜர்) ப்போய்ப்பார்க்கலாம்.

Exit (காட்சி மாறுகிறது).

———

காட்சி 5.

இடம்—குப்புசாமி ஐயர் வீடு.

குப்புசாமி: (கதவைத் தட்டும் சப்தம் கேட்டு) யாரய்யா அங்கே?

ஆநந்தராவ்: ஸ்வாமி, நமஸ்காரம்!

குப்பு: என்னய்யா இது? இராக்காலத்திலே!

ஆநந்த: ஸ்வாமி, Trust லே ஒரு உத்யோகம் வேண்டும் கஷ்டப்படுகிறேன். உங்கள் தயவு!

குப்பு: Come in (வாரும்) வீட்டுக்குள் அழைத்துப்போய் கதவைத் தாளிட்டு, உட்காரும்! (பொடி போட்டுக்கொண்டு ஆ— இப்போ ஒண்ணும் Vacancy (காலி) யே இல்லே. நீர் என்ன பாஸ் பண்ணியிருக்கிறீர்?

ஆநந்த: ஸ்வாமி, நான், ஒரு Old F. A.—Accts. (கணக்கு) Banking, (வட்டி வியாபாரம்) Book-keeping, Tests இலே Diploma வாங்கியிருக்கேன்.

குப்பு: உம்—நூற்றுக்கணக்கா பணத்தை வாரி இறைத்தாற் கூட வேலேயாப்படறது குதிரைக்கொம்பா இருக்கு—இருந்தாலும் உங்க விஷயத்தில் கவனிக்கிறேன்; நிச்சயமா சொல்றத்துக்கு இல்லே! Vacancy (காலி) இருக்கா என்று பார்க்கிறேன்.

ஆநந்த: ஸ்வாமி, நான் ஒரு பைசாவுக்குக்கூட வழியில்லாத பிச்சைக்காரன். ஏதோ புண்யவான் உங்க தயவினுல்—ஒரு உத்தி யோகம் மாத்திரம் கிடைச்சுடுத்தோ—என் கடனே நான் எப்படி யாவது செலுத்திவிடுகிறேன்! மறக்கவேமாட்டேன்.

குப்பு: வரவாள் எல்லாரும்தான் பிச்சைக்காரன் கிச்சைக் காரன்—ஏழை பாழைன்னுண்டிருக்கானுங்க—நானும் ஒரு ஏழை தான், பாரும்—உம்—நீர் இதற்கு முந்தி எந்த உத்தியோகத்திலே இருந்தீர்?

ஆநந்த: நான் The Hindu Bank லே Manager and Accountant ஆக (இந்தியா பாங்கியில் மானேஜாரகவும்—அகவுண் டாகவும்) இருந்தேன்.

குப்பு: உம்முடைய பேரு?

ஆநந்த: என் பேரு . . . . (hesitating தயங்கி) ஆனந்த ராவ் !

குப்பு: ஓ! நீ ராஜாங்க விருந்தாளியா யிருந்தவனல்லவா? (Jail Bird).

ஆநந்த: Bends his head (தலை குனிகிறார்.)

குப்பு: என் ஐயா? நீ Criminal Offence (சட்டத்தை மீறின குற்றத்துக்காக) லே தண்டனை யடைந்தவனுச்சே! கவர்ன் மெண்ட் விரோதிமாதிரின்னு நீ? Trust லே ex-convicts (தண்டனையடைந்தவர்) களுக்கு உத்தியோகம் கொடுக்கமுடியாது! நிச்சயமாய்!

ஆநந்த: ஐயர்வாள்? நான் பணத்தைநீட்டியிருந்தால் தானே கிடைத்திருக்கும் உத்யோகம், இல்லையா? இப்போ பணம் எங்கிட்டே இல்லேன்னு தெரிந்ததும் என் சிறைதண்டனை முட்டுக்கட்டையாய்விட்டதோ? இதுவா தர்மம்?

குப்பு: உத்யோகம் இல்லென்னு போகாமல்—ராத்திரி வேளையிலே—Law (சட்டம்) படிக்கிறயே எங்கிட்ட Law போ! மரியாதையாய் வெளியிலே!

ஆநந்த: ஒம்மாதிரி புண்யவான்கள் உலகத்திலே இருக்கிறத்தினுலேதான் நாளுக்கு நாள் Epidemic (அம்மை முதலிய நோய்) Robbery யும் (வழிப்பறி) Famine (பஞ்சம்) Earthquake (பூகம்பம்) எல்லாம் ஜாஸ்தியாயிண்டே இருக்கு.

குப்பு: யார்ரா—Peon, (பியூன்) இவனை — Badmash! (அயோக்கியன்)!

ஆநந்த: நான் போகிறேன்! அடே அயோக்யா! நான் இப்போது எப்படித் திகைத்துத் திண்டாடுகிறேனே! அப்படியே நீயும் ஓலமிடும் காலம் வரும்! வராமற்போகாது நிச்சயம்!

குப்பு: சை Get out! (வெளியே போ) You rogue! (திருட்டுப்பயலே).

———

காட்சி 6.

இடம் : ராமனுடைய வீடு (Raman's House) Humming a tune). மெதுவாய் பாடிக்கொண்டு—Sundari is at some embroidery work. Lakshmi Raman's mother is stitching leaves. (சுந்தரி துணியில் பூ தைத்துக்கொண்டிருக்கிருள்...லட்சுமியம்மாள் இலைதைக்கிருள்).

சுந்தரம் : (பிரவேசித்து) ராமு, ராமு!

லக்ஷ்மி : யாரு—அடே சுந்தரமா! பார்த்து எத்தனே நாளாச்சு? சௌக்யமா அப்பா? உங்க அப்பா அம்மா சௌக்யமா? இதான் நம்ம சுந்தரி! நீ சீமைக்கு போறப்போ—அவள் 10 வயது குழந்தை!

சுந்தரம் : எல்லாரும் சௌக்யந்தான் மாமி! சுந்தரியா அது? இப்படி வாயேன்! Come, and Sit down! (வந்து உட்காரம்மா).

(Sundari feels shy and goes aside)
சுந்தரி வெட்கப்பட்டுக்கொண்டு ஒரு பக்கம் போகிருள்.

லக்ஷ்மி : சுந்தரி, என்ன அம்மா! வெட்கம்? எம்மா—அலமேலு மாமி குழந்தைதானே? இவனும் நம்ம வீட்டுக் குழந்தைதான்! இப்படிவா! தம்பி கூப்பிடரான் பாரு!

(Sundari and sundar exchange glances as she takes her seat.
சுந்தரி உட்காருகிறபோது சுந்தரமும் சுந்தரியும் பார்வை செலுத்துகின்றனர்.

சுந்தரம் : மாமி, ராமு எல்லாம் எங்கிட்ட ஒப்பிச்சுட்டான்! உங்க வீட்டு சமாசாரம் ஒண்ணுகூடவிடாமல்! ஆமாம்...வாழ்வும், தாழ்வும் நம்மைக் கேட்டுக்கொண்டாவருகிறது? "கடுகு சிறுத்தாலும் காரம் போகாது" என்று சொல்வது போல், கஷ்டமோ நிஷ்டூரமோ—சுந்தரியை நீங்க படிக்கவச்சது இருக்குப்பாருங்கோ—அதுதான் உங்களுடைய பெருந்தன்மையைக் காண்பிக்கிறது! சுந்தரி அதிர்ஷ்டசாலிதான்! Congratulation! Sundari, for

taking your degree with distinction! (சுந்தரி, நீமிக மேன்மையோடு பி. ஏ. பட்டம் பெற்றதற்காக உன்னை மெச்சுகிறேன்).

சுந்தரி: ஊம்; Thank you! (வந்தனம்).

சுந்தரம்: When did you take your degree? (நீ எப்பொழுது பி. ஏ. பாஸ் செய்தாய்?)

சுந்தரி: Last year! (சென்ற வருஷம்)!

{(Lakshmi Goes out) லட்சுமி போகிருள்.)

சுந்தரம்: ஏன்! இனிமேல்—என்ன உத்தேசம்! உத்தியோகமா?

சுந்தரி: பகவானுக்குத்தான் தெரியும்! யார்கண்டது?

சுந்தரம்: என்ன சுந்தரி, வெட்கமாபடறே — எங்கிட்டே சொல்றத்துக்கு? என்னையும் உங்க வீட்டு மனுஷஞ நினைக்கப்படாதா—நான் அந்யமனுஷன் இல்லை—என்று அம்மாகூடச் சொல்லவில்லையா?

சுந்தரி: இல்லை—இப்பொ அண்ணுவுக்கே ஒரு உத்யோகத்துக்கு வழியைக் காணேம்! எனக்கென்ன — I am after all a girl! (எப்படியாயிருந்தாலும் நான் பெண்தானே)

சுந்தரம்: இருந்தா என்ன? இந்தக் காலத்திலேயா, அப்பா? Ladies (பெண்கள்) தான் எதிலேயும் முந்திக்கொள்கிருர்கள்! புருஷர்களெல்லாம் back numbers ன்ஞ—(பின் நபர்கள்)—உம்—நீங்களெல்லாம் கெட்டிக்காரர்தான். எங்களைப்பார்க்க இப்போ! ராஜ்யமே உங்க ஆளுகையிலேதானே இருக்கு—ஆமாம்! சுந்தரீ, உனக்கு எந்த Service (வேலை) பிடிக்கும்? சொல்லு!

சுந்தரி: எனக்கா? I am most interested in social service (பொதுஜன சௌக்யமான உழைப்பில் பிரியமிருக்கிறது). அண்ணுவுக்கு மாத்திரம் நல்லபடியா ஒரு வேலை கிடைச்சுதன என் பொழுதை Harijan Service (ஹரிஜன சேவை) க்கே devote (அர்ப்பணம்) செய்யலாம்னு இருக்கேன்! என்னைவிட எளியோர், அநாதைகள், துன்பப்பட்டவர்கள், இவர்கள் ஸேவையில் ஈடுபடுவது தான் என் மனதிற்குகந்தது. கடவுளுக்கும் இந்தத்தொண்டு பிரியம் என்று நினைக்கிறேன்!

சுந்தரம்: That is good! (அதுதான் நல்லது) சுந்தரீ, நான் தான் அப்படி நினைச்சுண்டு இருக்கேன்னு—நீ எனக்கு மேலே யோசனைபண்ணி வச்சுருக்காயே—என்ன ஒற்றுமை பார்த்தாயா? ஆமாம்! What is more noble, than such sacrifice and service? (இதைவிட மேலான தியாகமும் உழைப்பும் என்ன இருக்கிறது?)

சுந்தரி: That's in the hands of God! (அது தெய்வச் செயலைப் பொறுத்தது!) பொதுஜன ஸேவை ன்னு எனக்கு அதிலி ருக்கிற திருப்தி வேறெதுலேயும் கிடைக்கமாட்டேன் என்கிறது.! நம்ம வயத்துப்பாட்டை மாத்திரம் பாத்துண்டா ஆச்சா? அது ரொம்ப கேவலம்னு படுகிறது எனக்கு!

சுந்தரம்: ஆஹா! எவ்வளவு உன்னதமான நோக்கங்கள்! உன்னைப் பெற்ற பாரதத் தாய்க்கு நீ ஒரு பெருமை தந்தவளாகிறாய்! உன்னைப்போன்ற மக்கட்பேறு கிடைப்பது அவள் பாக்கியம்தான் என்று சொல்வேன்! உயர்ந்த நோக்கமும், உள்ளத்தில் இரக்கமும், உழைப்பில் ஆசையும்கொண்ட உனக்கு உதவி எது வேண்டுமானு லும், என்னைக் கேள்—! Depend on it! (அதை நம்பியிரு).

சுந்தரி: Thanks! (வந்தனம்) ஏன் இன்னும் அண்ணனைக் காணோம்! பார்த்துட்டு வரலாமா?

சுந்தரம்: சுந்தரீ,. இரேன்—என்ன அவசரம்? ராமு தானே வரான்! ஆமாம் சுந்தரி—நீ வரயா?—இந்த Lady Sudarsanam (சுதர்சனம்) வீட்டுக்கு—இந்த மாதிரி Social Work (பொது ஜன ஸேவை) லே அந்த அம்மாளுக்கு நல்ல அனுபவம்! அவர்களுக்கு நீ நல்ல உபகாரமாக யிருக்கக்கூடும்! என்ன சொல்றே?

சுந்தரி: Thanks (நல்லது) அதுக்கென்ன? பார்க்கலாம்! எங்கே அண்ணு! உம்—(rest less) (இருக்கப் பிரியமில்லாமலிருக் கிறுள்).

{Enter Raman, ராமன் பிரவேசிக் கிறுன்.

சுந்தரம்: எங்கேடா போனே ராமு!

ராமன்: என்னமோ—இந்த Secretariat லே—ஒரு Temporary Vacancy (கொஞ்ச நாளைக்கு ஒரு வேலை காலி) இருக் கின்னு கேள்விப்பட்டு—அங்கே போனேன்! Siege (முற்றுகை)

போட நம்மதுக்கிரி ஜாதகம் நம்மை விடுமா? அங்கே பாரு! அவன் அவங்கள் ஆள் மேலேதான் அவங்களுக்குக் கண்; நமக்கு எங்கே!

சுந்தரி: அண்ணு! ஆனுல் இதுவும் failure தானு? (வீண் தானு).

{Enter Lakshmi; லட்சுமி பிரவேசிக்கிருள்.

ராமன்: ஆமாம்—அம்மா—அங்கேயும் தூதிர்ஷ்டக் காற்றுத் தான்—அடித்தது!

சுந்தரம்: விட்டுதள்ளுடா அதை! ராமு—Don't worry (சங்கடப்படாதே) உம்; ராமு, இத்தனை நாள் கழித்துப்பார்க்கிற வாளை வெறுங்கையோடு போய்ப்பார்க்கவாண்டாம்னு இரண்டு புடவை—கொண்டு வந்தேன்:

{Gets up to go to the car எழுந்திருந்து வண்டியினிடம் போகிருன்.

சுந்தரி: என்ன இது? Charity யா? (தானமா)? Never! (ஒருபோதும் வேண்டாம) நான் சொல்றென்னு கோபித்துக்கொள்ளாதேயுங்கள்! எங்களுக்கு இதெல்லாம் வேண்டாம்! எங்க ராமுவுக்காவது எனக்காவது ஒரு வேலை கிடைச்சா அதுவே போதும்!

ராமன்: ஆமாம்! சுந்தரி சொல்றது சரிதான்! அம்மா எண்ணம்கூட அதே தான்!

லக்ஷ்மி: ஆமாம்! ஒத்தனுக்கு—அவனு துன்னு நாலுகாசு இருந்தால்தான் அப்பா—கண்யமாயிருக்கும்! வேலையும் போதும் வந்தா கூலியும் கோடீஸ்வரன் ஆய்விடுவான்! அப்பா சுந்தரம்! கொஞ்சம் மனசுவச்சு ராமுக்கு ஒரு வேலை சம்பாதித்துத்தா! போதும்! சுந்தரிக்கென்ன! சின்ன பெண்தானே! அவள் வார்த்தையைக் கவனிக்காதே!

சுந்தரம்: பார்க்கலாம்! மாமீ, இருந்தாலும் சுந்தரியினுலே தான் நமக்கு, சுகமும், தானே வரும்னு நினைக்கிறேன்! உம்! பார்க்கப்போனுக்க—Sundari's ideas are wonderful (சுந்தரியினுடைய எண்ணங்கள் அபூர்வமானவை).

சுந்தரி: வாயேன் அம்மா! coffee எல்லாம் எடுத்துண்டு வரலாம்!

(போகிருள்)

ராமன்: என்னடா போடா (சுந்தரம்) சுந்தரிக்கு நீ புடவை கொண்டு வந்ததுலே கோபம் போலே இருக்கு.

சுந்தரம்: அப்பா—நான் செய்தது தப்பா இருந்தா—அவள் கிட்டேயே மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்! சரிதானே!

ராமன்: ஐய்யோ! திரும்பவும் அந்த ராமாயணம் வேண்டாம்! அம்மா குணம்தான் உனக்குத் தெரியும்—அவளுக்குக்கூட இது கொஞ்சம் சுருக்கென்னு பட்டிருக்கிறது.

Enter Sundari and Lakshmi. Sundari wants to go away after serving coffee (சுந்தரியும் லக்ஷ்மியும் பிரவேசிக்கிறார்கள். சுந்தரி காபி கொடுத்ததும் போகயத்தனிக்கிறாள்.

சுந்தரம்: சுந்தரீ, என்மேலே கோபமா! ஊம்?

சுந்தரி: இல்லவே இல்லே—கோபம் என்ன? நீங்கள் அது தான் மரியாதையாயிருக்கும்னு நினைத்தீர்கள் போலிருக்கு! அது தப்பாகுமா—என்ன?

சுந்தரம்: கோபம் இல்லேயே! ஆனால் கொஞ்சம் coffee சாப்பிடு!

சுந்தரி: (ஊஹூம்). இப்பத்தான் உள்ளே Coffee சாப்பிட்டுட்டுவரேன்; Won't you excuse me please? (என்னை மன்னிக்கமாட்டீர்களா?).

சுந்தரம்: அதெல்லாம் முடியாது Company க்காக (ஸ்னேகத்துக்காக) கொஞ்சம் எங்களோடே சாப்பிட்டா—என்ன ஆகிவிடும்? come along? (வா).

Tiffin is served (சிற்றுண்டி பரிமாறப் படுகிறது)

சுந்தரம்: பலகாரம் எல்லாம் ரொம்ப ஷோக்கா இருக்கே உம்! சுந்தரியினுடைய காரியத்துக்குக் கேட்கணுமா—எல்லாத்திலேயும்—Distinction தான்! (கெட்டிக்காரி).

லக்ஷ்மி: இல்லே—சுந்தரம்! காலத்தைப்பாரு—பலகாரம் பண்ணினது நான்—பேரு சுந்தரிக்கு—ஏதோ சுந்தரிகிட்டே இருக்கிற அபிமானத்தாலே சொன்னே போலிருக்கு.

சுந்தரம் : Laughs idiotically (அசட்டுச் சிரிப்பு).

சுந்தரி : ஏழை வீட்டுக்குத் தகுந்ததுதானே! How do you expect anything better! (உயர்ந்ததை எப்படி எதிர் பார்க்க முடியும்).

சுந்தரம் : Wonderful girl! (அபூர்வமான பெண்) ஆமாம் நாளைன்னைக்கு என் வீட்டிலே உங்களுக்கு Tea. சுந்தரிக்கு Card (பத்திரிகை) அனுப்பறேன்!

சுந்தரி : என் R. S. V. P. (பதில் எழுதலாமல்லவோ) யோடெத்தானே! (Laughing.)

சுந்தரம் : என்ன— வராதிருக்க வழிதேடுகிறுயோ—அந்தக் கதையெல்லாம் முடியாது—வந்தே தீரணும். நான் வரட்டுமா? நாழி யாறது!

(Exchange looks as he goes out
போகிறபோது ஒருவருக்கொருவர் பார்வை)

ராமன் : சரி—Good-bye then...Cheeri—ho. (போய்வருகிறேன்)

———

காட்சி 7.

இடம்: கடற்கரைச் சாலை.

காலம்: மாலை.

ஆநந்த ராவ்: (துக்கத்துடன் தனக்குள் தன் கஷ்டத்தை நினைத்துப் பாடிக்கொண்டே போகிறான். எதிரில் அவன் நண்பன் குண்டு ராவ் வருகிறான்.

ஆநந்த: (நின்று) என்ன குண்டு ராவ்! சௌக்யமா? (அசட்டுச் சிரிப்பு முகத்தில்)

குண்டு ராவ்: யார் தெரியவில்லையே!

ஆநந்த: நினைத்துப்பார்! ஞாபகத்துக்கு வரும்! நான் இப்போது வேலையில்லாமல் கஷ்டப்படுகிறேன். நீ நல்ல ஸ்திதியிலிருப்பதால் உன் சிபார்சில் ஒரு வேலை எங்கேயாவது?

குண்டு ராவ்: (கோபக்குறியுடன்) பேஷ்! நன்றாயிருக்கிறது! உன் பேச்சு! என்னைப் பேரிட்டழைத்தாய்! நிறுத்தினாய்! பழகியதாக அடையாளம் காட்டுகிறாய்! வேலை வேண்டு மென்கிறாய்! இவையெல்லாம் எந்த ஊர் வேலை? எந்த ஊர் தந்திரம்? பிச்சை வேண்டுமானால் கேள்! இந்தா இரண்டணா! எடுத்துக் கொண்டு போ! இனி இப்படிப்பட்ட வேலை யாரிடமும் வைத்துக் கொள்ளாதே!

(இரண்டணாவை எறிந்துவிட்டுப் போகிறான்.

ஆநந்த: (குண்டு ராவை முறைத்துப்பார்த்து) அடே குண்டு ராவ்! உன்னை யார் பிச்சை கேட்டது! என்னை அறியாதவனைப் போல் ஏன் நடிக்கிறாய்? நன்றி மறந்த பாபம் உன்னைச் சும்மா விடாது!

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பது கேட்டதில்லையா? நீ சண்டாளன்! மகாபாபி!

குண்டு ராவ்: ஏ பிச்சைக்காரப் பயலே! உனக்கு இவ்வளவு பேச்சா? நாயே! சே! சே! கழுதை! விலகு! தூ! (என்று காரியுமிழ்ந்து தூர விலகிச் செல்கிறான். போகும்பொழுதே தனக்குள்) வேலையிலிருந்தபோது துள்ளினான் கழுதை. துள்ளினமாடு பொதி சுமக்கிறது. வேணும்! நல்ல எண்ணம் கிடையாது!—

(சொல்லிக்கொண்டே போகிறான்)

ஆநந்த : (தன்னந்தனியே செல்கையில் தனக்குள்) ஆஹா! வறுமையின் கொடுமையே கொடுமை! "இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின் இன்மையே இன்னாதது" என்பது சரியாயிருக்கிறது. ஈசா! இன்னும் என்ன கஷ்டம் இவன் அனுபவிக்க வேண்டும்? அந்தோ! அந்தோ! மனைவியை இழந்தேன்! எல்லாமிழந்தேன்! ஜப்திசெய்ய வந்தவனைத்தடுத்ததினால் ஸௌகார் பொய் வழக்கில் என்னைச் சிறைச் சாலைக்கும் அனுப்பினான்! பெற்ற மகன் வெறுத்தான்! பெற்ற மகள் இகழ்ந்தாள். நண்பர்கள்—என் நண்பர்கள் என்னிடம் உதவி பெற்றவர்களும் என்னைத் திக்கரிக்கிறார்கள் திக்கற்றேன். திகைக்கின்றேன்! வழி காணேன்! ஈசா! நீ தான் கதி!—(கொஞ்சம் போய்) பணமில்லாதவன் பிணம்! இந்த நடைப் பிணம்! உலகிலிருந்தென்ன? ஒழிந்தென்ன? எல்லாமொன்றுதான்! இதோ இந்தக் கடலில் விழுந்து சாகிறேன்.

(போகிறான்)

காட்சி 8.

இடம்: கடலோரத்தில் வேறிடம்.

காலம்: காலை.

ராமன், கிருஷ்ணசாமி, நடேசன், கோபாலன், சுந்தரம் முதலியவர்கள் உட்கார்ந்து பேசுகிருர்கள்.

கிருஷ்ணசாமி: சுந்தரம் ஒரு காரியம் செய்தால் சுந்தரமாகத் தான் செய்கிருன். முதல்தர விருந்து நடத்தி விட்டான்!

கோபாலன்: சும்மா சொல்லியென்ன பயன்? தகப்பனுரைப் போல் விதரணை தெரிந்தவன்.

நடேசன்: சுந்தரம், (முதுகைத் தட்டிக் கொடுத்து) எனக்குத் தயிர் வடை பிடிக்கும் என்பதை நீ யெப்படிக்கண்டாய்! ஆஹா! விருந்து தடபுடல்!

சுந்தரம்: அடே! நடேசா! உன்னையும் உன் தன்மையும் தெரிந்த எனக்கு உனக்குப் பிரியமானது தெரியாமற் போகுமா?

ராமன்: என் தன்மையும் உனக்குத் தெரியுமே! எனக்கேன் மிளகு ரசம் வைக்கவில்லை?

சுந்தரம்: நீ வயிற்றுவலிக்காரன்! உனக்கும் விருந்துக்கும் வெகுதூரம். போகட்டும். ஒரு பாட்டுப்பாடு. தமாஷாய்க் கேட்போம்!—

(ராமன் விருந்துப்பாட்டுப் பாடுகிருன். எல்லோரும் கேட்கிருர்கள்: இவர்களுக்குக் கொஞ்சம் தூரத்தில் ஆநந்தராவ் பிரவேசிக்கிருன்.)

ஆநந்த: (தனக்குள்) ஏ! ஆநந்தராவ்! நீ வறுமைப் பிணியினுல் வருந்தி அழிவதைவிட இந்தக் கடலுக்கு இரையாய்க் கண்ய மடை.

(விழுகிருன்)

(இவன் விழுந்த சத்தம் இவர்கள் செவியிலே படுகிறது. உடனே கவனிக்கின்றனர்).

சுந்தரம்: யாரோ விழுந்துவிட்டான் கடலில்?

ராமன்: (பாட்டை நிறுத்திவிட்டு) யாரோ குளிக்கிருன் அப்படி ;

கோபாலன் இல்லே ! விழுந்துவிட்டான் !

{எல்லோரும் எழுந்து அந்த இடத்துக்குப் போய்க் கவனிக்கின்றனர். நீரில் தத்தளிக்கும் ஆநந்தராவை ராமனும் கிருஷ்ணனும் கடலிலிறங்கி வெளியேற்றுகின்றனர்.

எல்லோரும்: அட பாவமே ! இவன் பாங்க் ஆநந்தராவல்லவா ? இவனுக்கேன் இந்தக்கேடு ?

(முதலுதவி செய்கின்றனர்).

ஆனந்தராவ் (பிரக்ஞையடைந்து எல்லோரையும் விழித்துப் பார்த்து) ஆ ! ஈசா ? இந்த நடைப்பிணத்தை என் பிழைக்கவைத்தீர்கள்.

சுந்தரம்: ராயரே ! ஏனிந்தக் கஷ்டம் ?

ஆநந்த: (மெலிந்த குரலில்) வறுமை என்னும் பகைவன் என்னேக் கடலில் தள்ளிவிட்டான் ! அந்தோ ! களேப்பு மேலிடுகிறது ! அப்பா சுந்தரம் ! இந்த அதிர்ஷ்டவீனனேப்பற்றி உனக்கெல்லாம் தெரியும். நானென்ன சொல்லட்டும் ?

சுந்தரம்: பிறகு பேசிக்கொள்வோம் — என் மோட்டாரில் என் பங்களாவுக்கு வாரும்.

கிருஷ்ணன்: சுந்தரம், பைத்யமா உனக்கு ? கண்டோர் காரியுமிழ ஜெயிலுக்குப்போன இந்தக் கடன்காரனிடம் என் நீ இரக்கம் பாராட்டுகிருய் ! அற்பனுக்கு இடம் கொடுத்த கதையாய் முடியும். இப்படியே அனுப்பிவிடு எங்கேயாவது போகட்டும் !

சுந்தரம் கிருஷ்ணசாமி, நீ இப்படிப்பேசுவது நன்ருயில்லே ! யாராயிருந்தாலென்ன ? ஆபத்தில் உதவிசெய்தே தீரவேண்டும் ! வாயை மூடு—யாரேனும் கேட்டால்— இகழ்வார்கள்.

கிருஷ் உன் இஷ்டம் ! நீ பிரபு ! நான் சொன்னுல் கேட்பாயா ? விஷமுள்ள சர்ப்பத்துக்கு இடந்தருகிருய்.

ராமன் கிருஷ்ணசாமி, நீ பேசுவது மனித சுபாவத்துக்கு ஏற்றதாயில்லே ! வீண்பேச்சு ! சுந்தரம், நடக்கிறது நடக்கட்டும் ! வா ! போவோம் அழைத்துக்கொண்டு !

(ஆநந்தராவை மெதுவாய் நடத்திக் கொண்டு புறப்படுகிருர்கள்.

Act II—இரண்டாவது அங்கம்.

Scene in front of the Senate House.

காட்சி 9.

இடம் : சென்னையில் ஸெநெட் ஹவுஸுக்கு முன்புறம்.

சுந்தரம் : கோபாலசாமி, Convocation Address (கான்வகேஷன் அட்ரஸ்) எப்படிடா ?

கோபாலன் ! (தலையை யசைத்து) அதுக்கென்ன நன்ருயித்தானிருந்தது.

நடேசன் : போடா ! என்ன நன்ருயிருந்தது ? வருஷம் தவருத பல்லவி ஒண்ணு ! Simple living—High Thinking (சாதாரண ஜீவனம் உயர்ந்த யோசனை) பாடராங்களே ! அதுவா ? எண்டா இந்த Educated unemploymentஐக் (படித்து உத்யோகமில்லாமலிருப்பவர்களை) குறைக்கிறத்துக்கு ஏதாவது ஒரு Suggestion (உபாயம்) மருந்துக்கு இருந்ததாடா அதிலே ? டேய்! அதுக்கு மாத்திரம் நான் சொன்ன ஒருவழியைத்தவிர வேறேவழி கர்ணம் போட்டாலும் கிடைக்கப்போகிறதில்லே. வேணும்ஞ--பார்.

கோபால : அப்பா, போரும் ! நிறுத்திக்கோ ! உன் பழைய Communist (கம்யூனிஸ்ட்) பஞ்சாங்கத்தை !

(ராமனும் சுந்தரியும் பிரவேசிக்கிருர்கள்).

ராமன் : என்னடா என்ன நடேசன் ஜமாய்க்கிருன் ?

சுந்தரம் : ஆமாம் ! என்னமோ Bolshevism preach (எல்லாம் ஒன்ருவதுபற்றி ப்ரஸங்கம்) பண்ணுகிருன் ! Convocation Addressலே (கான்வகேஷன் அட்ரஸிலே) Educated unemployment ஐக் (படித்து உத்யோகமில்லாதவர்களை) குறைக்கிறத்துக்கு Constructive Suggestion ஆ (பயன்தரக்கூடியதானவழி) ஒண்ணும் இல்லையாம்.

நடேசன் : நான் சொல்றது உங்களுக்குக கேலியாத்தாண்டா இருக்கும்! ஆனு--பாரு—இந்த Capitalism ஒழிஞ்சாத்தாண்டா—உலகத்துக்கு விமோசனம் ; எங்கே பாரேன் ; இந்த Capitalist விஷந்தாண்டா ஊரைக்கெடுக்கிறது ! செலவுக்கு வழி தெரியாதவனிடமும் மனமில்லாதவனிடமுந்தான் பணம் தாண்டவமாடுகிறது. அன்னுடம் பாடுபட்டு அரைவயிற்றுக்கஞ்சிக்கு அல்லாடராங்களே

அவங்க பாடு நாளுக்கு நாள் மோசம் ஆகிவாது உலகத்திலே அதனால்தான் கொள்ளை, கொலை முதலிய அநியாயங்களெல்லாம் நடக்கின்றன. இதோ பாரு! எவனோ தேடிவைத்துவிட்டுப்போன பணத்தை வச்சுண்டு—பெரிய—Factory (தொழிற்சாலை) ஒண்ணு வைச்சுக்கிறான். அதிலே ஆயிரக்கணக்கான ஜனங்கள்— அணுக் கூலிக்கு உழைக்கிறார்கள் — வாலாபம் — யாருக்கு? சோம்பேரி Capitalistக்கு (இன்னும் தின்னுகொழுக்கிறத்துக்கு) Workmen க்கு அரை வயிற்றுக்கு Lottery (திண்டாட்டம்) தான்! இந்த Capitalism ஒழியணுமா—வாண்டாமா? நீயே சொல்; ரஷ்ஷியாவைப் பார்ரா.

கிருஷ்: தம்பி, உனக்கும் எனக்கும் என்னடா தெரியும் ரஷ்ஷியாவைப்பற்றி? அவனவன் பெண்டாட்டி பிள்ளைகூட அவனது தான் என்கிற நிச்சயம் கிடையாதாண்டா அங்கே? ஏண்டா, Capitalist (மூலதனம்) இல்லாமல் எந்த Industry (கைத்தொழில்) முன்னுக்கு வரும்? வேலை செய்றவன்களுக்கு கூலி கொடுக்க எங்கேடா போறது? சும்மா ஏண்டா வாய்ப்பந்தல் போடறே?

கோபால்: I don't agree with you Krishna (கிருஷ்ணசாமி, நீ சொல்வது எனக்குப் பிடிக்கவில்லை) ஏழைகளைக் காப்பாத்ரத்துக்கு Government ன்னுடா முன்னே வரணும்! வேறெந்தப் பாட்டன் வருவான்? மதராஸ் Agricultural Indebtedness (விவசாயக் கடன்) எவ்வளவு தெரியுமா? 200 Crores of rupees (200 கோடி ரூபாய்) Agricultural return (விவசாயத்தின் மூலம் வரவு) 4% (100-க்கு 4 வீதம்கூட இல்லை). Ryots (குடியானவர்களெல்லாம்) எல்லாம் கடனிலே மூழ்கிப்போறாங்கடா! Stateடே (கவர்ன்மெண்டே) பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அவசியமானால் பொருளுதவியும் செய்யவேண்டும்! கூலியை உயர்த்தவேண்டும்! வரியைக் குறைக்கவேண்டும்! ஏழை மக்களின் வறுமையையும், பசியையும், பிணியையும் நீக்கி அவர்களுக்கு உதவிசெய்ய State (ஸ்டேட்) ஒண்ணுனாலேதான் முடியும்!

ராமன்: ஆமாம்! நீ சொல்றது கொஞ்சம் நியாயந்தான் ஆனால் Government கிட்டே ஏராளமாய்ப் பணம் இருக்கு! சும்மா அவாளுக்கு இஷ்டமானவர்களுக்கெல்லாம் வாரி இறைச்சுண்டே இருக்கக்கூடாதா—என்று உன் மாதிரி அநேக தேசத்தவர் நினைக்கிறார்கள். அது தப்பு! தெரிந்ததா? அப்படி Government இது

வரையில் செலவழித்திருக்கிற பணமெல்லாம் வீணுகிக்கொண்டுதான் வருகிறதென்று தெரிகிறது ; என்ன அது வெறும் ' ' Rob Peter and Pay Paul " என்கிற Policy (கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதுபோல்) தானேடா ? இரண்டு பேருக்கும் லாபமில்லாதது எதிற்சேர்ந்தது ?

சுந்தரி : நீ சொல்கிறது சரிதான் அண்ணு ! ஆனுக்க Government நியாயமாய் உதவிபெறவேண்டிய கைத்தொழிலுக்கு help (உதவி) பண்ணித் தொழிலேயும் அபிவிருத்தி செய்யணும்னு தான் நான் நினைக்கிறேன்.

ராமன் : அது சரிதான்—அம்மா ! எல்லாருக்கும் State தான் உதவிசெய்யனும்னு எதிர்பார்க்கிறது அசட்டுத்தனம் ! கோடி கோடியாய் பணத்தை வச்சுண்டு கர்ணன் மாதிரி கேட்கிறவாளுக் கெல்லாம் கொடுத்துண்டே இருந்தாலும்கூட அவனவனுக்கு இருக் கிற ஆசையிலே நூற்றிலே ஒரு பங்கு கூட நிவர்த்தியாகாது. தவிர தானே கஷ்டப்பட்டுத் தேடாத பணம் வந்த வழியே போகவும் போய்விடுகிறது.

சுந்தரம் : உம்-உம்—என்னடா புதுசா ஒண்ணேக் கிளப்பரே; Capitalism, Communism (கம்யூனிஸம்) Socialism (ஸோஸலிய லிஸ்ம்) or state help, (அரசாங்க உதவி) இதிலேதான் ஒண்ணும் பிடிக்கல்லே ! உனக்கு, வேறே ஒரு புது " Ism " மோ உன்னுது.

ராமன் : அதெல்லாம் ஒண்ணும் இல்லே—அப்பா ! நம்மளவங் களெல்லாம் வேலேயில்லாமல் திண்டாடிண்டு இருக்கிறப்போ—கையி லே வேலேயைப் பிடிக்கிறத்துக்கு சமத்து இல்லாமல்—பேசி, பேசி ஆகப்போகிறதேன்ன ? உம்—விட்டுத்தள்ளு—இதையெல்லாம் !

சுந்தரம்—கிருஷ் : டே, டே, நீ ஏதோ plan (யோசனே) பண்ணியிருக்கே — சொல்லுடா — நல்லதா: இருந்தா—எல்லாருக் குந்தானே நல்லது ? சொல்லு !

ராமன்: பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து—unemployment (வேலேயில்லாமை.) பிசாசையும் விரட்டவேண்டுமானுல், எனக்குத் தோன்றிய வழி. Co-operation (கூட்டுறவு) மூலம் தொழில் விருத்தியடையச் செய்வது ஒன்றினுல்தான் முடியும் கோ வாப்ரேஷன் நோக்கங்கள்—(மேலான தொழில்) Better forming

(மேலான விவசாயம்) Better living (உயர்ந்த வாழ்வு) Co-operative movement) கூட்டுறவு இயக்கம்)ஒண்ணும் புதுசா ஆகாசத்திருந்து குதித்துவிடவில்லே ! மேல்நாடுகளில் Co-operative movement ஞல் சுபிக்ஷமடைந்தவை அநேகம்—Russia வில்கூட Co-operative Societies (கூட்டுறவுச் சங்கம்) நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றன, Great War (மஹா யுத்தம்) க்கு அப்புறம் அப்படியே முழுகிப்போறப் போலே இருந்த Germany (ஜெர்மனி) யிலே குடியானவர்களுக்கு நல்லகதியளித்தது இந்த Co-operation தான்.

ஒரு தேசம் விவசாயத்திலே, Co-operation மூலம் விருத்தியடையமுடியும் என்பதை நிரூபிப்பதற்கு Denmark (டென்மார்க்கு) ஒண்ணே போதும். இப்போ European Market (ஐரோப்பிய வியாபாரம்) டிலே இருக்கிற முக்கால்வாசி Dairy products (உணவுச் சாமான்கள்) Denmark து தான். நேற்றுவரைக்கும் Co-operation ன்னு எந்த டாக்டர் செஞ்சான்னு கேட்டிருந்த Denmark —இப்போ First rate Co-operative Agricultural Country—(முதல் தரமான விவசாயக் கூட்டுறவு தேசம்) யாயிருக்கு—தெரியுமா ?

Italy (இடாலி) யிலே பாரு !—ஸ்வாமி கொடுத்த இரண்டு கைகளேத் தவிர காலணுக்கூட இல்லாமலிருந்த கூலிகளெல்லாம் இப்பொழுது மூலேக்கு மூலே Co-operative Society (கூட்டுறவுச் சங்கம்) ஏற்படுத்துக்கொண்டு விட்டார்கள்.

நான் சொல்றது என்ன தெரியுமோ-மனஸ்லே திடத்தோடு புத்திசாலித்தனமா, சுறுசுறுப்பா மாத்திரம் வேலே செய்துவந்தா – Co-operation ஐப்போல Powerful Organisation (பிழைப்பிற்குரிய ஒரு வலுவான வழி) வேறே கிடையாது !

எண்டா Denmarkலே ஐசுவர்யத்தை அள்ளிக் கொடுக்கிற Co-operation இந்தியாவிலே கொடுக்காமற் போயிடுமோ ? எண்டா பொன் விளேயும் பூமியல்லவா இந்த பாரத பூமி? விருப்பத்தோடு வேலே செய்து வறுமையை நீக்கிக்கொள்ள 38 கோடி ஜனங்கள் சித்தமாயிருக்கிறர்கள்—நமது தேசத்திலே அவர்கள் இந்த சமயம் வேண்டுவது கூட்டுறவு நாணயமல்லாது வேறென்றுமில்லே Co-operative Credit (கூட்டுறவு நாணயம்) ஒன்று மாத்திரம் கிட்டுமாயின்—பாரத மக்கள் எவருடைய உதவியுமில்லாமல் கஷ்ட ஜீவனம் நீங்கி, இன்பமடைவார்கள் என்பது தான் என் சித்தாந்தம் !

கிருஷ் : பலே ! பலே !—சிங்கப்ட நீ ! எல்லோருடைய கஷ்டத்துக்கும் (ஒரு பொடி வைத்து) ஒரே வெடி வைத்துட்டாயே ! ஹா ! ஆமாம் ! தம்பி, உன் Co operative Society கூட Capital இல்லாமல் என்ன செய்யும்னு தான் கேள்வி ? விவசாயம்—Capital (மூலதனமோ) State helpபோ (ராஜாங்க உதவியோ) இல்லாமல் எப்படி விருத்தியடையும் ?

ராமன் : அடே, அதுதான் வேண்டாங்கிறேன் ! Co-operative movementக்கு (கூட்டுறவு இயக்கத்துக்கு) வேண்டியது என்ன தெரியுமா ? பணமல்ல !—நாணயம்—சொல் நாணயம்—செய்கை நாணயமும்தாண்டா வேணும்—Capitalist Bank (மூலதன பாங்கி) இருக்கே அதுக்கு—Security (உத்தரவாதம்) வேணும்னு Property (சொத்து) அவசியம். Co-operationக்கோ—Honesty—Character—(நாணயமும்—பரஸ்பர உதவியும் தான் Security—(உத்தரவாதம்) இதிலே ஆளுக்கொரு நியாயமும் வித்யாஸமும் இல்லே. இதுதான் இதிலுள்ள முக்கியமான குணதிசயம் !—"There is no employer or labourer in a Co-operative enterprise" "All for each and each for all" is its motto. (இங்கே உத்தியோகஸ்தர் அல்லது உழைப்பாளிகள் என்பது கிடையாது. ஒருவர் பலருக்கும் பலர் ஒருவருக்கும் உதவி செய்வதுதான் பிரதானம்). தனவந்தர்களுக்கும் தாகர்களுக்கும் இங்கே எதடா இடம் ? கிடையாது. ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளும் பான்மையும் உழைப்பதற்கோர் உத்ஸாகமும் Co-operation தானே தருகிறது.

கோபாலன் : I agree with Raman ! (ராமன் சொல்வது சரியென்று படுகிறது எனக்கு !)

சுந்தரம் : So do I. (நானும் அப்படியே நினைக்கிறேன்)

எல்லாரும் : Except Krishnaswamy and Natesan கிருஷ்ணசாமியையும் நடேசனையும் தவிர எல்லோரும்) We agree. (நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்).

நடேசன் : ஆமாம் ! உன் Co-operation அபிவிருத்தியடையறதோ இல்லையோ—வருஷத்துக்கு வருஷம் University (யூனிவர்ஸிட்டி) யானது Graduates number (பி. ஏ. பாஸ்பண்ணினவர்கள் எண்ணிக்கை) ஐப் பொறுமையோடு அபிவிருத்தி பண்ணிக்கொண்டே வரதே ! அவாளுக் கெல்லாம் என்ன செய்ய முடியும்.

அப்பா உன் Co-operative Societies? (கூட்டுறவுச் சங்கங்கங்கள்).

ராமன்: எண்டா! எல்லா Graduates (பட்டதாரி) களுக்கும் உடனே உத்யோகம் சம்பாதித்துத் தரப்போகிறதென்று சொன்னேன்? நம்ம Graduates (பட்டதாரிகள்) என்ன செய்யணும் தெரியுமா? University Degree வாங்கினதும், வாதக்ஷணக்கு எதிர்பார்ப்பதுபோல் Government (கவர்ன்மெண்டி)லேயோ Firm (கம்பெனியிலேயோ) வேலையை எதிர்பார்க்காமல் அங்கங்கே சிறிய சிறிய Society (சங்கம்)களை Organise (உண்டு)பண்ணிக் கொண்டு அவனவனுக்குள்ள புத்தியைக் கைத்தொழில் அபிவிருத்தியடையச் செலவிட வேண்டும். அப்படிச் செய்வதால் அவர்கள் கஷ்டம் நீங்குவதல்லாமல் இன்னும் அநேகருடைய கஷ்டமும் அகன்றுவிடும்.

நடேசன்: போடா! (வெறுத்தாற்போல்) பேசி என்னடா பிரயோசனம்? என்ன கைத்தொழில் ஆரம்பிக்க முடியும். ஒரு Co-operative Societyயை வைத்துக் கொண்டு?

ராமன்: அப்படிக் கேளுடா, ராஜா, இதோ பார்! நம்ம ரத்கதுலே, ஒரு டஜன் இருக்கிறோம்—ஒரு பிரயோஜனமுமில்லாமல்! வேலைக்கு ஏறி இறங்காத கம்பெனி வாசல் கிடையாது! Office (ஆபீஸ்) களும் கிடையாது. நாம் எல்லோரும் சேர்ந்துண்டு ஒரு Society வைப்போம். அதன் மூலம், பட்டணத்துக்கு அத்யாவசியமான, Laundry (சலவைச் சாலை) Bakery (ரொட்டிக் கிடங்கு) Fuel Depots (விறகுக்கடை) முதலியவைகளெல்லாம் நடத்துவோம் இதனுடைய Working (வேலையை) ஐப்பற்றிய details (விவரத்தை) இங்கே நின்றுண்டு பேசி ஆகிரகாரியமில்லை! ஒரு நாள் இதுக்காகன்று Meet (கூடி) பண்ணி discuss (பேசுவோம்) பண்ணுவோம்! என்ன சொல்ரேள்?

கோபால்: On Sunday next? (அடுத்த ஞாயிற்றுகிழமை)

சுந்தரம்: Yes, At Murugesa Mudaliar's Choultry at 3 P.M. (ஆஹா, முருகேச முதலியார் சத்திரத்தில் மத்யானம் 3 மணிக்கு).

All Right (சரி).

காட்சி 10.

இடம் :— சென்னை—ஹைகோர்ட்டில் வக்கீல்கள் இருக்கு மிடத்தில் முன்புறத்தாழ்வாரம்.

காலம்:—காலை.

ஸ்ரீபுரம் : ஜமீன் மிராசுதாரர் குருசாமி நாயக்கரும்—பக்கிரி சாமிப் பிள்ளையும் பிரவேசிக்கிருர்கள். அங்கே சுந்தரத்தினுடைய குமாஸ்தா அண்ணுச்சாமி ஒரு பக்கமிருந்து சுந்தரத்தின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருன்.

குரு : ஐயா நீங்கள் இவ்விட மிருப்பவர்கள் தானே !

அண் : ஆமாம்.

குரு : நாங்கள் ஸ்ரீபுரம் ஜமீன் மிராசு ! எங்களுக்கொரு வக்கீல் வேண்டும்.

பக்கிரி : ஐயா—யாரோ சீனிவாசய்யாமில்ல— அவங்களைப் பார்க்கணும்.

அண் : வக்கீல் சீனுவாசய்யர்.

குரு : ஆமாங்க—அவர் பேச்சில் நார்ட்டணுமே !

அண் : அதோ அந்தப் பதினுருவது நெம்பரில் அவரிருக்கிருர்- நல்ல வக்கீல்—கெட்டிக்காரர்.

குரு : நல்லது கும்பிடுகிருேம்.

(கும்பிட்டு விட்டுப் போகிருர்கள்)

(சுந்தரம் பிரவேசிக்கிருன்) அண்ணுச்சாமி—என் இந்நேரம் ?— என்று கேட்கிருன்.

சுந்தரம் : என் யாராவது தேடிக்கொண்டு வந்தார்களோ— வழியில் ஆநந்த ராவ் பிராணனை வாங்கினுன்—

அண் : நம்மைத் தேடிக்கொண்டு யாரும் வரவில்லை. ஸ்ரீநிவா சய்யருடைய பேரைக் கேட்டுக்கொண்டு இரண்டு பேர் வந்தார்கள்- அவர்கள் ஸ்ரீபுரம் மிராசுதாரர்களாம்.

சுந்தரம் : ஒ அப்படியா ? அவர்கள் ஸ்ரீபுரத்து ஆசாமிங் களா—என் வக்கீலைத் தேடிக் கொண்டு வந்தார்கள்.

அண் : ஏதாவது வழக்கிருக்கும்—

(தங்கள் அறைக்குள் போகிருர்கள்).

———

காட்சி 11.

இடம்: வக்கீல் ஸ்ரீநிவாசய்யர் அறை

ஸ்ரீநிவாஸய்யர் ஆஸனத்தில் அமர்ந்திருக்கிறார். குருசாமி நாயக்கரும்—பக்கிரிசாமி பிள்ளையும் பக்கத்தில் ஒரு பெஞ்சிலமர்ந்து பேசுகிறார்கள்.

ஸ்ரீநிவாஸய்யர்: நீங்கள் ஸ்ரீபுரம் ஜமீனைச் சார்ந்தவர்களா?—என்ன விசேஷம்!

குரு: எங்கள் ஜமீந்தார் நாங்கள் கொடுக்க வேண்டிய பகுதிப் பணத்தை அதிகப்படுத்தினார் நாங்கள் கொடுக்க மறுத்தோம்—அதனால் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்—விசாரணை இன்னும் ஒருவார மிருக்கிறது.

பக்கிரி: விசாரணை—நம்ம—நம்ம சைதாப்பேட்டை கலக்டரையா கிட்டே

குரு; ஆம் தாங்கள் எங்கள் பக்கம் வக்கீலாக வரவேணும்.

ஸ்ரீநிவாஸய்யர்: ஜமீந்தார் நல்லவராயிற்றே! என் பகுதிப் பணத்தை அதிகப்படுத்தினார்?

பக்கிரி: அவரு நல்லவருதாங்க—தங்கமான மனிசன்—கடன் பட்டுக்கிட்டாரு—வகைதொகை யில்லாமே—கடன்காரங்க—சும்மா—பிடுங்கிறானுங்க வட்டி—வட்டி என்று கொட்டிக்கொடுக்காரு.

குரு: ஆமாங்க—மனிசன்—மகனைச் சீமைக்கு அனுப்பினார் படிக்க—அதான் ஆரம்பம்—செலவுக்கு மாதா மாதம் பணம்—தந்தி மூலமாயும்—மணியார்டர் மூலமாயும்—போய்க்கொண்டே யிருந்தது—

பக்கிரி: மவக்கல்யாணம்—

குரு: ஆகா—அதை வாயிட்டுச் சொல்லமுடியாதுங்க—

பக்கிரி: என்னவென்று சொல்லுவோம்—தடபுடலே—வாணமென்ன—பாண்டென்ன—ஏ ஆயா—ஆடல்பாடல்—காலச்சேபம்—மேளம்—கொள்ளையோ கொள்ளை—கைகொண்டமட்டும்—மனம் கொண்டமட்டும்—செலவிட்டாரு மன்னன்.

குரு: இப்போது—பிள்ளைக்கு வேறே இந்த ஊருக்கு மாதா மாதம் அனுப்பிக்கொண்டேயிருக்கிறார்.

பக்கிரி : செலவாகுதே! கடனாகுதே! கடன்காரர்கள்வந்து தொந்தரவு செய்கிறாங்களே—என்கிற எண்ணம் கொஞ்சமாவதிருப் பதாக தெரியவில்லே.

குரு : இன்னைக்கு ஆயிரம் ரூபா கொடுங்கள்—நாளைக்கு தம் பிடி ஏது கையில்—

ஸ்ரீநிவாஸய்யர் : ஆஹா—அப்படியா—

பக்கிரி : சாமி கேளுங்க—பத்து வருசமாச்சு.வாக்காவெட்டி-

குரு : ஏரி மாராமத்தாய் இருபது வருஷமாச்சு. நாங்கள் எப் படி பகுதிப்பணம் கொடுப்போம்—

பக்கிரி : கேட்டெமாங் காட்டியும்—செவிடங் காதில் சங் கூதிய மாதிரிதான்—சாமி. இந்த கேஸ் செயிக்கணும்—இல்லாட்டி —நாங்க பினங்கு—சிங்கப்பூர்—ஸிலோன்—பாக்கவேண்டியதுதான்.

ஸ்ரீனுவாசய்யர் : சரி—நேரமாகுது—நான் பாடுபட்டுக் கேஸை ஜயித்துத் தருகிறேன்—பீஸ்— கொண்டு வந்திருக்கிறீர்களா?

குரு : பீஸ் எவ்வளவாகும்?

பக்கிரி : பீஸ் என்ன அது?

குரு : (கையைக்சுண்டி) பணம்.

பக்கிரி : செ—அதில்லாட்டி நடக்குமா? எவ்வளவு வேணு மாம்?

ஸ்ரீநிவாஸய்யர் : ரூபாய் ஐம்பதுதான்—அதிகமில்லே.

பக்கிரி : (குருசாமி நாயகரைப் பார்த்து) கொடுங்கிறேன்— ஐயர் சாப்பிடட்டும்—சந்தோசயா—சாமி இந்தப்பணம் எங்க பெஞ் சாதி பேரிலிருந்த நவைகளை அடகுவைச்சுக் கொணுந்தோம்—கவனி யுங்க—நாங்க—ஏளெங்க—

குரு : பீஸ்—கொஞ்சம் குறைத்துக்கொள்ளக்கூடாதா!

பக்கிரி அடா—சே—கொடு—இதுக்கெல்லாம் பின்வாங்காதே.

(குருசாமி நாயக்கர் கொடுக்க, வக்கீல் பெற்றுக்கொண்டு சரி — வாருங்கள் 10வ கவனிக்கிறேன். இருவரும்— (எழுந்து கும்பிடுபோட்டபடி நின்று) சாமி-வாரோம் மறந்திடாதேயுங்கள்— (போகிறார்கள்).)

காட்சி 12.

இடம்: பாரிஸ்டர் சுந்தரத்தினுடைய அறையின் முன்புறம். சுந்தரமும் அண்ணுச்சாமியும் முன்வந்து பேசுகிருர்கள்.

சுந்தரம்: (ஆச்சரியத்துடன்) கவனித்தாயா பேச்சை. இவை யெல்லாம் உண்மையாயிருக்குமா? அப்படியிருக்க நியாயமில்லை— இருந்தாலும் குடிகளிடம் அவ்வளவு கடுமை காட்டக்கூடியவ ரல்லவே—

சுந்தரம்: இவர்கள் சொல்லுகிறபடி கடன் பட்டிருந்தால்— எனக்கு மாதா மாதம் பணம் தவருமல் அனுப்புகிருரே. அது சாத்யமா?

அண்ணு: அதிருக்கட்டும்—சீமைக்குப் பணம் அனுப்பிய திலும்—உங்கள் தங்கை கல்யாணத்திலும் ஏராளமான செலவு— அதனுல் ஏதாவது—தொல்லையுண்டாயிருக்குமோ என்று தோன்று கிறது. ஆனுல் சர்வஜாக்கிரதையாயிருப்பவர்—கவனிக்கணும்.

சுந்தரம்: அதனுலேதான் நான் ஸந்தேகப்படுகிறேன். இன் ஞென்று—நமக்கு எவ்வளவு கஷ்டமிருந்தாலும்—குடிகளைக் கஷ்டப் படுத்தலாமா? அது தவறு—அது தான். கேட்டது முதல் மனம் சங்கடப்படுகிறது.

அண்ணு: விசாரிப்போம்—அவசரப்படவேண்டாம்.

சுந்தரம்: ராமன் அவுங்களெல்லாம் Co-operative (கூட்டு றவு) meeting மீடிங்) கூடுகிருர்கள். பார்த்துக்கொண்டு இன்று ராத்திரியே போகிறேன்.

———

காட்சி 13.

இடம்: முருகேச முதலியாருடைய சத்திரம். ராமன் முதலி யவர்கள் கூடியிருக்கிறார்கள்.

ராமன்: (எழுந்து) நாம் இன்று இங்கே கூடியிருப்பதற் நோக்கம்படித்து உத்யோகம் கிடைக்காமல் கஷ்டபடுகிறவர்களுக்கு உதவிபுரியவும் உழைப்பதற்குத் திறமையிருந்தும் வேலை அகப்படா மல் தவிக்கும் ஏழை மக்களுக்கு வேலையைக் கொடுத்து அவர்களு டைய வறுமையை நீக்குவதற்குமேயாம். அதற்கு அநுகூலமாக நாம் கூட்டுறவுச் சங்கமொன்று ஸ்தாபிக்க வேண்டும். அதாவது நாம் ஒன்றுபட்டிருந்து நமக்கு அவசியமான காரியங்களை நாமே செய்து கொள்வது. 'ஒன்று பட்டாலுண்டு வாழ்வு' என்பதைக் கவனியுங்கள் இந்தச் சங்கத்தில் நமக்கு பலவிதமான நன்மைக ளுண்டு. ஒருவர் பலர்க்கும் பலர் ஒருவர்க்குமாக உதவி செய்து கொள்ளலாம்.

இந்த கூட்டுறவு முறையை எல்லாத் துறைகளிலும் உபயோ கிக்கலாம். இதில் பலர் சேர்ந்து ஒரு தொழில் நடத்துவதால் அதிக மான சரக்குகளை உண்டாக்கலாம். உழைப்பும் ஒற்றுமையுந்தான் இந்த இயக்கம் கோருவது. உழைப்பில் மாத்திரம் உற்று கவன முண்டானால் ஒற்றுமையுந்தானே உண்டாகும். சண்டை சச்சரவு கள் ஏற்படா: சகோதர பாவம் உண்டாகும். பெரியவன் சின்ன வன்—பணக்காரன்—ஏழை—படித்தவன்—படிக்காதவன்—எஜமா னன்—வேலையாள் என்கிற வித்யாசம் ஏற்படாது.—

இதில் அவரவர் சக்திக்கிசைந்தபடி பணம்போட்டால் போதும். யாரிடமிருந்தும் எதையும் தானமாக ஏற்பது கூடாது- காரியத்தில் பொறுப்பும்—நம்பிக்கையும், நாணயமும் இதில் அமைகிறபடியால் தொழிலை சந்தோஷமாய் இடையூறில்லாமல் நடத்த வழியுண்டு.

ஜேம்ஸ்: ஐயா கையில் பணம் இல்லை—ஆனால் நல்ல உழைப் பாளி. சங்கத்தில் சேர எனக்கு வசதியுண்டா?

ராமன்: ஓ—தாராளமாய்ச் சேரலாம்—உமக்கு என்ன வேலை தெரியும்;

ஜேம்ஸ்:—நான் ஒரு மெகானிக் (மிஷின் ரிபேர் செய்பவன்).

ராமன்: நல்லது—நன்றாய்ச் சேரலாம்.

கிருஷ்ணசாமி: ஏன் அப்பா, எல்லாருகிட்ட இருந்து பணத்தைச் சேர்த்துக் கொண்ட பிறகு கம்பி நீட்டிவிட்டால்—

எல்லாரும்: (சிரிப்பு) நல்ல கேள்வி! அப்பா எழுந்திரு—உன் மூஞ்சியைப் பார்ப்போம்—கொஞ்சம்

கிருஷ்ணசாமி: இப்போ நான் சொல்றது பரிகாசமாகத்தான் படும் உங்களுக்கு. இவுங்கோ இப்போ இப்படித்தான் ஹரிச்சந்திரன் மாதிரி பேசுவாங்க, பணமெல்லாம் சேர்ந்தபிறகு எல்லாவற்றையும் ஒரே அடியாய் (ஏப்பம் விட்டு) இப்படித்தான்—ஏப்பம்—இப்படி எத்தனைப் பார்த்திருக்கோம் நாம்.—

சுந்தரம்: நண்பர்களே; அப்படி ஒன்றும் நடவாது. இந்தச் சங்கம் முழு நம்பிக்கையின்பேரில் ஏற்படுவது. இதில் சட்டதிட்டங்களுண்டு. அவைகளைக் கூட்டுறவுச் சங்க ரெஜிஸ்டிராரிடம் பதிவு செய்து கொள்வோம். ஒரு சங்கத்தின் வரவு செலவு பதிவுகள் அவருடைய மேற் பார்வையின்கீழ் இருக்கும் பணம் போய் விடுமென்ற கவலையே வேண்டியதில்லை—உங்களுக்கு.

ஒருவர்: ஆனால் சங்கம் ஸ்தாபிப்பது நல்லதுதான்—இடம் அதற்கு?

சுந்தரம்: நான் இந்த இடத்தையே வாடகை யில்லாமல் கேட்டு வாங்கித் தருகிறேன்.

நடேசன: தோழர்களே இப்பொழுது சங்க அலுவல்களை நன்குயறிந்த ஒருவர் அதற்குத் தலைவராயிருப்பது அவசியமாகும். அப்படி நம் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தலைவராயிருக்கும்படி ஸ்ரீமான் ராமன் அவர்களையே உங்கள் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

கோபால்: நானும் அப்படியே வேண்டுகிறேன்.

எல்லாரும்: அப்படியே—அப்படியே.—

(கரகோஷம்)

ராமன்: (கை கூப்பியபடி) அன்பர்களே! என்னை விட ஊக்கத்துடன் உழைப்பவர்கள் அநேகரிருந்தும் என்னைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்ததற்கு நான் மனப்பூர்வமாய் வந்தனம் செய்கிறேன்—கூடுமான வரையில் சிரத்தையுடன் உழைத்தே தீருவேன். ஆண்டவன் அனுக்ரஹந்தான் வேண்டும், சங்கத்திற்குக் காரியதரிசியைத் தேர்ந்தெடுப்பது நம் அடுத்த வேலையாகும். காரியதர்சி நியமனம்

ஆனபிற் சங்கத்தில் சேரவிரும்புகிறவர்கள் அவரிடத்திலேயே தம் தம் பெயரைக் கொடுக்கலாம்.

சுந்தரம் : காரியதரிசியாயிருக்க நான் நம் ஆநந்த ராவ் அவர்களாகக் கேட்டுக்கொள்கிறேன். அவருக்கு பாங்க் வேலைகளில் நல்ல அநுபவமுண்டு. நல்ல உழைப்பாளி!

கிருஷ்ணசாமி : அப்பா, போயும் போயும்—இந்த ஆளைத்தானா பிடிக்கவேண்டும், இவருடைய பூர்வோத்ரமெல்லாம் தெரியாதுபோலிருக்கு.

சுந்தரம் : கிருஷ்ணசாமி, அவருடைய பூர்வோத்ரமல்லாம் உன்னைவிட எனக்கு நன்றாய்த் தெரியும் வறுமையின் வாய்ப்பட்டு அவர் சிறுமையும் படவேண்டியதாயிற்று. அவருக்கு நேர்ந்த கஷ்டங்கள் அநியாயம். சரி அவரைவிடக் கணக்கு வழக்குகளில் கைதேர்ந்த ஒருவரை நீ பிரேரிக்கலாம் உனக்குத் தெரிந்திருந்தால்.

கிருஷ்ணசாமி : (பதில் இல்லை).

நடேசன் : நான் ஸ்ரீ ஆநந்த ராவ அவர்களின் பெயரை என் முழு மனதுடன் ஆமோதிக்கிறேன். நமது சங்க விஷயங்களில் சிரத்தை காட்ட அவரைவிட மேலானவர் கிடைப்பது துர்லபந்தான்.

எல்லாரும் : சரிதான், ஆனந்த ராவ் அவர்களே காரியதரிசியாயிருக்கட்டும்.

(கரகோஷம்)

ராமன் : இனி எந்தத் தொழில் முதன்முதலாகத் துவக்கவேண்டியதென்பதுபற்றி யோசனை செய்யவேண்டும்.

லட்சுமியம்மாள் : மக்களே! நீங்கள் சிறியவர்களாயிருக்கிறீர்கள் நீங்கள் வெவ்வேறாய்த் தனித்தனியே குடித்தனமிருந்துகொண்டு கஷ்டப்படுவதைக் காட்டிலும் எல்லோரும் சேர்ந்து வசதியான இந்த இடத்தில் ஒரே குடும்பமாக இருப்பது மிகவும் நல்லது; லாபமும் அடையலாம். அவரவர் வீட்டுப்பெண்கள் இங்கே வந்து பொது நன்மைக்காக உழைக்கலாம். செலவும் தேகசிரமமும் குறையும்.

கல்யாணி : எனக்கும் நடேசன் தாயாருக்கும் இங்கேயிருந்து சிரத்தையுடன் பாடுபட ஸர்வசம்மதம். லட்சுமியம்மாள் உங்களுக்குதான் நல்ல பலகாரங்கள் செய்யத்தெரியுமே. உங்கள் உதவியைக் கொண்டு ஒரு பலகாரக்கடையும் ஸ்தாபிக்கலாம். நன்றாயிருக்கும்

நாங்கள் உங்களுக்கு உதவியாயிருப்பதுடன் வேலையும் கற்றுக்கொள்வோம். என் ராமு, பலகாரக்கடை ஏற்படுத்தி அதைச் சங்கத்தின் மூலமாய் நடத்துவது கஷ்டமா என்ன ?

ராமன் : அம்மா, இந்தக் காலத்தில் படித்திருந்தபோதிலும் கைத்தொழில் எதையும் கற்றுக்கொள்ளாத எங்களால் தற்சமயம் சமுகத்துக்கு ஒருவித நன்மையும் ஏற்படப்போவதில்லை. ஆனால் படிப்பு இருந்தாலும் இல்லாதிருந்தாலும் பெண்மணிகளாகிய உங்களிடம் ஜிவாதாரமான அமிர்தம் போன்ற உணவை அளிக்கும் திறமை இருக்கிறது. அதைப்பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

வண்ணான் : ஏனையா அவுங்க சொன்னதைப்பாத்தா எங்களுக்கு வண்ணாருக்குக்கூட ஏதோ வயி பொறக்கப் போவதாங் காட்டியும்லே நெனச்சு—வந்தோம்—அந்தப்பத்தி பேச்சே எடுக்க நீங்களே : என் ஐயா (ஈனஸ்வரம்) நாங்க வேலையம்புடாத கைட்டப் படரோங்களே எங்களுக்கும் உங்க சங்கம் ஒரு வயிகாமிக்காதுங்களா !

ராமன் : கட்டாயமாய் உங்களுக்குத் தானுண்டு சங்கத்தில் சௌகர்யங்கள். உங்களெல்லோரையும் சங்கத்திற்கு சேர்த்துக்கொள்கிறோம். சங்கத்தின் நோக்கம்—ஒரு சலவைச்சாலை வைப்பது மாத்திரமன்று அத்துடன் ஒரு ரொட்டிக் கிடங்கு, விறகு கடை இவைகளைக்கூட ஸ்தாபிக்கவேண்டும்மென்கிற தீர்மானம்.

கோபால் : ஏனப்பா—இந்த சங்கத்தினால் ஏற்படும்சௌகர்ய ஸாதனங்களெல்லாம், அங்கத்தினாக இருப்பவர்களுக்கு மாத்திரம் தானா—அங்கத்தினரல்லாதவர்களுக்கு முண்டா—

ராமன் : ஆரம்பத்தில் சில அங்கத்தினரல்லாதவர்களுக்கும் உண்டு. ஆனால் நாளடைவில் அவர்களையும் அங்கத்தினராக்கிக் கொள்ள நம்மால் கூடும் என்று நம்புகிறேன்.

சுந்தரி : என் அண்ணா நமக்குப் பங்குமுதல் (Share Capital) எல்லாம் சேர்ந்த பிறகுதானே நீ சொன்ன எதையும் ஆரம்பிக்க முடியும். பணம் சேர்வதற்கு முன்னாலே--

சுந்தரம் : பணத்தைப்பற்றிய கவலை—இதோ என்மோதிரத்தை என் பங்குத்தொகைக்குப்பதிலாக அளிக்கிறேன். தவிரவும் என் தகப்பனரிடம் கேட்டு 50 ஏகர் விஸ்தீரணமுள்ள சவுக்குத் தோப்பொன்றையும் குத்தகையின்பேரில் எடுத்து நம் சங்கத்தில் விறகு

கடையை ஸ்தாபிக்கலாம் என்று நினைக்கிறேன். மற்ற நண்பர்களும் தம்மாலியன்றதைப் பங்கு முதலாகக் கொடுத்துதவலாம்.

கிருஷ்ண : அடாடா ! என்ன அநியாயம் !! அக்ரமமிது!!! கூட்டுறவுச்சங்கமாம், போஜன சாலையாம். ஆ ! எல்லா ஜாதியாரையும் ஒன்ருக்கி ஊரைக்கெடுக்க யோசனையா இது ? பேஷ் ! எண்டா சுந்தரம் ! உனக்கு ஏன் இப்படி புத்தி மழுங்கிப்போய்விட்டது ? ஊரார் செலவில் இந்த ராமனும் ராயனும் கொழுப்பது போதாமல் உன் தகப்பனுர் கொடுத்திருந்த ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள மோதிரத்தையுமா அவர்களுக்குத் தொலைக்கவேண்டும். சரி—சரி—சலவைச் சாலை—சக்கிலிச் சாலை—குயவன் சாலை [எல்லாவற்றையும் இவுங்களே வைச்சிண்டு மற்ற எல்லாருடைய பிழைப்பிலும் மண்ணைப்போட உத்தேசம் ? உங்களுக்குக் கவிழ்ந்துபோகிற காலந்தான் இது.

சுந்தரம் : அடே கிருஷ்ணசாமி ! உன் விஷமப்புத்தி மாத்திரம் என்றும் உன்னை விடுவதில்லை. பயன்தரக்கூடிய எதையும் உனக்குச் செய்ய யோக்கியதை இல்லாவிட்டாலும், நாலுபேர் சேர்ந்திருப்பதை கலைப்பதிலேதான் உன் கவனம். உனக்கு இதில் இஷ்டமில்லாவிட்டால் நீ வெளியேறிவிடு. அதுதான் நீ எனக்குச் செய்யும் பேருபகாரம்.

கிருஷ்ண : (கோபத்துடன்) என்னையாடா வெளியே போகச் சொல்றே—ஆகட்டும் பார்க்கலாம்

(போகிருன்)

ராமன் : நண்பர்களே ! இந்தச் சிறிய சச்சரவைப் பொருட்படுத்தாதீர்கள். பொதுக்காரியங்களில் இவ்விதமான சண்டைகள் ஏற்படுவது சகஜந்தான். இந்தக்கூட்டம் முடிவடையப்போகிறது. சங்கத்தில் சேரவிரும்பும் நண்பர்கள் தம்தம் பெயரை ஸெகிரிடரி ஆநந்தாவிடம் கொடுக்கலாம். சுந்தரி, நம் எண்ணங்களெல்லாம் குறைவில்லாமல் நிறைவேறக் கடவுளைப் பிரார்த்திப்போம்.

Act III—மூன்றாவது அங்கம்.

Scene in the Bungalow of Sreepuram Zamindar.

காட்சி 14.

இடம்: ஸ்ரீபுரம் ஜமீன்தார் பங்களா.

[ஜமீன்தார் வீரபத்திர முதலியார் அறையில் உட்காந்திருக்கிறார். சுந்தரம் பக்கத்தில் வேறொரு ஆசனத்திலமர்ந்து பேசிக்கொண்டிருக்கிறான்.]

ஜமீன்தார்: ஏன் திடீரென்று புறப்பட்டு வந்தாய்?

சுந்தரம்: நேற்று ஒரு சமாசாரம் கேள்விப்பட்டேன்.

ஜமீன்தார்: என்ன அது?

சுந்தரம்: நம்ம ஜமீனில் நீங்கள் கிஸ்தியை அதிகப்படுத்திவிட்டீர்களாமே திடீரென்று. அப்படி அதிகப்படுத்தியது மல்லாமல் கொடுக்காத குடிகள் பேரில் வழக்கும் தொடுத்திருக்கிறீர்களாம் கோர்ட்டில்—இது என்ன உண்மையா?

ஜமீன்: அப்பா சுந்தரம் அப்படியொன்று மில்லையே!

சுந்தரம்: அப்பா, தயை செய்து உண்மை யென்னவென்பதைச் சொல்லுங்கள்.

ஜமீன்: அப்பா, சுந்தரம் உன்னிடம் மறைத்து பேசுவதிற் பயனென்ன? ஜமீனை ஆளவேண்டியவன் நீ—நான் எத்தனை நாளைக்கு இருக்கப்போகிறேன். நீ கேள்விப்பட்டதுண்மைதான்.

சுந்தரம்: அப்படியா! அப்படி நடந்துகொள்ள நேரிட்டதற்கு காரணமென்ன?

ஜமீன்: உன்னை சீமையில் படிக்கவைத்ததிலும், உன் தங்கைக்கு கல்யாணம் நடத்தியதிலும் செலவதிகமாய் கடன்பட நேர்ந்தது. அந்தக் கடனைத் தீர்த்து உனக்கு சௌகர்யம் செய்துவைக்க வெண்ணி கொஞ்சம் கிஸ்தியை உயர்த்தினேன். இதுதான்—கிஸ்தி செலுத்த மறுக்கிறவர்கள் பேரில் கேஸும் போட்டிருக்கிறேன்.

சுந்தரம்: அப்பா, ஒன்று கவனியுங்கள். நாம் இது வரையில் ஜமீனில் நல்ல பேர் வாங்கினோம். இல்லையா?

ஜமீன்: ஆம்.

சுந்தரம் : இப்போது நம்முடைய சௌகர்யத்துக்காக நாம் நம் குடிகளை வருத்துவதாகிறது, இந்த செய்கை. இது முன்பிருந்த நல்ல பேரை கெடுப்பதோடு போகாமல், குடிகள் நம்மீது பகைமை பாராட்டவும் இடமுண்டாகிறது. ஆகையினால் நான் உங்களை நமஸ்காரம் செய்து கேட்டுக்கொள்கிறன். குடிகள் மீது போட்டிருக்கும் கேஸை வாபீஸ் வாங்கிங்கொள்ளுங்கள் முதலில்—

ஜமீன் : சுந்தரம் ! அப்படிச் செய்யலாம்— ஆனல்.

சுந்தரம் : கடனடைப்பதெப்படி என்று கேட்கலாம்—சொல்லுகிறேன்—குடிகள் மாமூலாகக் கொடுக்கும் பகுதிப்பணம் கொடுக்கட்டும்—நாமினி சிக்கனமாய்ச் செலவிட்டுவருவோம். இனிமேல் என்னாலும் செலவேற்படாமல் பார்த்துக்கொள்கிறேன்.

ஜமீன் : நல்லது—ஸந்தோஷம்.

{இப்போது கேசவன் ஒரு சீட்டுக்கொண்டு வந்து கொடுக்கிருன்.

ஜமீன் : (வாங்கிப் பார்த்து) சிதம்பரம் செட்டியாரா ? உட்காரச்சொல் வருகிறேன்.

சுந்தரம் : (தனக்குள்) நாம் கேள்விப்பட்டது சரியாயிற்று—(வெளிப்படையாய்) பணந்தரவேண்டுமோ.—

ஜமீன் : முதல் முப்பதாயிரம் பாக்கியிருக்கிறது. நான்கு வருஷமாய் வட்டி செலுத்திவருகிருேம்.

சுந்தரம் : அட அடா—அப்படியா—

ஜமீன் : இதோ வருகிறேன்—(எழுந்து சிதம்பரம் செட்டியாரிடம்போய்) வாருங்கள். (மெதுவாய்) மகன் வந்திருக் கிருன் பட்டணத்திலிருந்து—காதில் படப்படாது—அடுத்த வாரம் தவருமல் அனுப்பித்தருகிறேன்—கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள் தயை செய்து—

சிதம்பரம் : பொறுக்கிறேன்—பொறுக்காமல் எங்கே போகிறேன். நானுங்களை முதலா கேட்கிறேன்—வட்டி தானே. அதற்குக்கூட இப்படிச் சொன்னல்—

ஜமீன் : கொஞ்சம் தயைசெயுங்கள்—

{சிதம்பரம் செட்டியார் போகிருர். ஜமீன் அவரை அனுப்பிவிட்டு திரும்புகிருர்.

தண்டல்காரன்: ஐயா! மண்டையை உடைச்சிட்டானுங்க பாவி—மண்டையை உடைச்சிட்டானுங்க என்று வறுகிருன்.

ஜமீன்: யார் செய்த வேலை யிது?

தண்டல்காரன்: செக்குமேட்டு அடைக்கனுங்க—

ஜமீன்: ஏன்—

தண்டல்காரன்: நான் கிஸ்த்துப் பணம் கேட்டேன், அதுக்காக ஐயா—(ஐயோ என்ன செய்வேன் என்றழுகிருன்).

ஜமீன்: நான் அவனை விசாரிக்கிறேன். அடே யாரங்கே?

சேவகன்: சாமி—

ஜமீன்: இவனை நம் வீட்டுவண்டியிலே ஏத்தி வைத்தியரிடம் கொண்டுபோய்விட்டு கவனிக்கச்சொல்—சீக்கிரம்—

சேவகன்; இதோ —

ஜமீன்: ஜமீனென்ருல் எளிதல்ல—இந்தமாதிரி பல சங்கடங்கள்.

சுந்தரம்: அப்பா—நேர்ந்திருக்கிற சங்கடங்களைத் தெரிந்துகொண்டேன்—நான் கொஞ்ச காலமாக ஏழைமக்களுடைய கஷ்டங்களை கவனித்து வருகிறேன்—அவர்களிடம் இரக்கம் பாராட்டி அவர்களை முன்னுக்கு கொண்டுவருவதிலேயே மனம் நாடுகிறது. ஆதலால் நம்முடைய ஏழைக்குடிகளை வருத்தி நாம் நம்முடைய சௌகர்யத்தைத் தேடிக்கொள்வதை வெறுக்கிறது மனம்.

ஜமீன்: நீ சொல்வது சரிதான்—ஏதேனும் வருவாயிருந்தாலொழியத் தாக்குப் பிடிப்பது தற்போத நிலையிற் கஷ்டந்தான்.

சுந்தரம்: குடிகளை வருத்தித்தாளுக வேண்டுமென்பதில்லை—பல வழிகளுண்டு அதற்கு—அவற்றுள் கூட்டுறவு சங்கம் சிறந்தது.

ஜமீன்: ஆம்—நானும் அதைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறேன்—மேல் நாடுகளில்—அப்படிப்பட்ட சங்கம் ஆயிரக் கணக்காயிருக்கின்றனவாம்—நம் தேசத்தில்—இங்கெல்லோரும் நெல்லிக்காய் மூட்டைகளாயிற்றே—நடை பெறுமா அது?

சுந்தரம்: ஏன் நடைபெருது—சென்னையில் சமீபத்தில் கூட்டுறவு சங்கம் சில ஸ்தாபித்தோம்—அவைகளெல்லாம் நன்ருய் நடந்து வருகின்றன—

ஜமீன்: அப்படியா? ஏன் எனக்குத் தெரிவிக்கவில்லை—

சுந்தரம் : கொஞ்சம் பலிதமாகட்டும் தெரிவிக்கலா மென்றிருந்தேன். நல்ல வேளையாச் சமயம் வந்தது. நாங்கள் ஏற்படுத்தியுள்ள கூட்டுறவு சங்கத்தில்—விறகு வியாபாரமுண்டு. ஐம்பது ஏகர் விஸ்தீரணமுள்ள நம்முடைய சவுக்குத் தோப்பை அந்த சங்கத்தின்மூலம் தரும நியாயமான குத்தகைக்கு ஒப்படைக்கலாம்—நல்ல லாபம் அடையக்கூடும்.

ஜமீன : ஓ நல்ல ஆலோசனை—

[மானேஜர் பிரவேசித்து வந்தனம் செய்கிறார்.]

மானேஜர் : (சுந்தரனைப் பார்த்து) நீங்கள் எப்போ வந்தீர்கள் ?

சுந்தரம் : காலையில்

ஜமீன்—என்ன விசேஷம்—

மானேஜர் : முதல் தவணை சர்க்கார் கிஸ்து இன்னும் செலுத்தியாகவில்லை. அதற்காக டிமாண்டு வந்திருக்கிறது—

ஜமீன் : எப்போதும் இப்படியே சொல்லுகிறீரே—நல்ல சமாசாரம் ஏதுமில்லையா ? இந்த கிஸ்திக்கு எவ்வளவு வேணும்—

மானேஜர் : (மெதுவாய்) 5000—

ஜமீன் : ஓகோ—இருக்கட்டும், நமக்கு வர வேண்டியது ஏதாவது வந்ததா ?

மானேஜர் : இல்லைங்க !

ஜமீன் : (கோபத்துடன்) போய்யா ! அது மாத்திரம்—இல்லைங்க ! எல்லாருந் தூங்குங்கள்—காரியம் நடந்துவிடும். போம்—என் முன் நில்லாதேயும் !

[போகிறார்]

சுந்தரம் : (பெரு மூச்சுடன்) விவகாரம் நன்றாயில்லையே !

ஜமீன் : என்ன செய்யட்டும்—கடன் வந்து மூண்டு விட்டது—கூடவே தானிய விலையும் படுமோசமாய் விழுந்து போச்சு. அதனாலேதான்—கொஞ்சம் கிஸ்தியை உயர்த்தினேன்.

சுந்தரம் : எப்படியிருந்தாலும்—எல்லோரு மின்பமாயிருக்கணும்—நாமும் இன்பமாயிருக்கணும்—அதற்கு வழிதேடணும்—அது கூட்டுறவு சங்கத்தினாலேதான் சாத்தியமாகிறது—அப்பா—பாருங்கள்—நமது நிலங்களை சாகுபடி செய்வதில் கூட்டுறவுச் சங்கப்படி நல்ல சௌகர்யங்களேற்படும்—

ஜமீன் எப்படி.

சுந்தரம் : நிலங்களை அவரவர் சௌகர்யத்துக்குத் தக்கபடி தாக்குத் தாக்காகப் பிரித்துக் கொடுத்து—உழுவதற்கும் விதை விதைப்பதற்கும் சங்கத்தின் மூலமாக சௌகர்யங்கள் செய்து கொடுப்பது—கிடைக்கும் மாசூலைச் சங்கத்தில் சேர்த்து வைத்து நல்ல விலை வரும் சமயம் பார்த்து சங்கத்தின் மூலமாகவே விற்பது. இதில் நஷ்டமே ஏற்படாது. தவிர சங்கத்தின்மூலம் நமக்கு கிஸ் தும் கெடுதவருமல் வந்துவிடும். முன் பணம் கொடுக்கும் பணக்கா ரர்கள் குறைந்த விலைக்கு மாசூலை அடையவும் முடியாது.—

ஜமீன் : ஆம் நல்ல வழிதான். இவ்வளவும் நீ எப்படி தெரிந்து கொண்டாய்.

சுந்தரம் : எல்லாம் இப்போது தான் சமீபத்தில் பழக்கத்தில் தெரிந்து கொண்டேன்.

ஜமீன். நம்முடைய நிலைமையில் தற்காலம் எதையும் செய்ய சௌகர்யமிராது போலிருக்கிறது—என்ன செய்யட்டும்.

சுந்தரம் : அந்தக் கவலை வேண்டாம் உங்களுக்கு எனக்கு வக் கீல் தொழிலிற் கொஞ்சங்கூடப் பிரியமில்லை. இதில் இறங்கி உழைத்து உலகத்துக்கு இதந்தேடுவதுடன் நமக்கும் இதந்தேடிக் கொள்வ தென்று தீர்மானித்திருக்கிறேன்—நீங்கள் சற்று தயை செய்யுங் கள்—

ஜமீன் : அப்படியானல் நீ சீமைக்குப்போய் ஏராளமான பணச்செலவில் Bar-at-law (பார் அட் லா) பாஸ் செய்தது வீண கவா போகிறது ?

சுந்தரம் : ஆமா—பார் அட்லா — கீர் அட்லா—வக்கீல் !— அட்வொகேட்—எல்லாம் இப்போது வீணகாமல் வாழ்கிறதோ—சை தெருவுக்குத் தெரு—வீட்டுக்கு வீடு—வக்கீல்—யாருக்கென்று தொ ழில் கிடைக்கும்—அந்த ஆசை வேண்டாமினி, நாம் அந்தப் படிப்பி னலடைந்த அறிவைக் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் காட்டினல்— எவ்வளவோ மேன்மையடையலாம்.

ஜமீன், சரி—உன் இஷ்டபடி செய்—

சுந்தரம் : இரண்டொரு வருஷகாலம் அனுஷ்டிப்போமே— பார்ப்போம், அப்பால் சௌகர்யம்போல் நடப்போம்.—

{Enter Servant (வேலைக்காரன் கடிதங் கொண்டுவந்து தருகிருன்),

ஜமீன் : (வாங்கி படித்துப் பார்த்து) பருத்திகுடி ஜமீன்—அவசரப்படுத்துகிருனே !

சுந்தரம் : கல்யாண விஷயமாகத்தானே !—(சிரித்து) மனிதர் பிறந்தது கல்யாண செய்துகொள்ளத்தாஞ—இது என்னவோ பிடிக்கவில்லை எனக்கு—வரதக்ஷிண வியாபாரம் வேறே—சை—இதனுல் பணக்காரரோடு பணக்காரர் சேர்கிருர்களே தவிர ஏழைகளுக்கு உதவி செய்தோமென்கிற வழியைக் காணேம்.—

ஜமீன் : சுந்தரம்—நீ சொல்வது சரி—உனக்கு இப்போது விவாக வயது வந்துவிட்டபடியால் பலர் முன்வருகிருர்கள்—உன் இஷ்டமென்ன ?

சுந்தரம் : ஏழை வீட்டுப்பெண்ணுயிருந்தாலும் படித்திருக்க வேண்டும். புருஷனேடு ஒற்றுமையாயிருந்து குடித்தனப் பாங்கறிந்து குடித்தனம் பண்ணக்கூடிய பெண்ணுயிருந்தாற்போதும் என்பது என் தீர்மானம்.

ஜமீன் : அது நல்ல முறைதான்—பணக்கார இடமாயிருந்தால்—நமக்கு இப்போது . . . .

சுந்தரம் : அந்த ஆசை வேண்டாம்—அது இழிவு—சில நிலங்களை விற்போம்—கடனைத் தொலைப்போம். கவலையற்றுக் காரியத்தை முடிப்போம்—நம்மை யார் தடுப்பது ?—

வேலைக்காரன் : எஜமானே எனக்கொரு கல்யாணம் பண்ணி வச்சிடுங்க—சின்ன எசமானுடைய கல்யாணத்தோடே—

ஜமீன் : (சிரிப்பு) ஆகா அப்படியே !

காட்சி 14—குடிகாரன் பாட்டு.

ஆகாசம் பூமிமேல் காணுது பாரடா
ஆடவும் பாடவும் தோணுது பாரடா
வீடுடன் வாசலும் சுழலுது பாரடா
வீரமும் தீரமும் கூடுது பாரடா
போறதும் வாரதும் தெரியல்லே பாரடா
புதுபுது எண்ணங்கள் பிறக்குது பாரடா ; அண்ணேன்—
கைகொட்டிச் சிரித்திட எண்ணமுந் தொணுதே
கண்டதும் கேட்டதும் கண்முன்னே காணுதே
மேளதாளங்களின் ஓசையும் கேட்குதே
மெய்மறந் தேபேச ஆசையும் ஆகுதே.

காட்சி 15.

இடம்: சென்னை கூட்டுறவுச் சங்க நிலையம்

[ஒருபக்கம் ஸ்திரீகள் பாட்டுப் பாடிக்கொண்டே மாவரைக்கிருர்கள். ஒரு பக்கம் ஜேம்ஸ் ஸைக்கில் ரிபேர் செய்கிருன். ஒரு பக்கம் தையல் மிஷினில் சிலர் தையல்வேலை செய்கிருர்கள். இப்படியிருக்கையில் ராமன், நடேசன், கோபாலன் முதலியவர்கள்—வாள்—கோடரி, அரிவாள் இவைகளுடன் வேலையிலிருந்து களைத்துப்போய்த் திரும்புகிருர்கள்]

கோபாலன்: அப்பாடா, கட்டைகளை உடைத்து உடைத்துக் கையெல்லாம் கொப்பளித்து விட்டதடா—உடம்பெல்லாம் அடிபட்டாற்போல் நோகிறது—காடு காடாய்ப்போய் விறகு வெட்டினேன். அதோடு விட்டதா—அந்த விறகைச் சுமந்து கொண்டுவந்து சாலையிலே சேர்த்தேன். கையும் காலும் சும்மா கெஞ்சுது! இன்னைக்கு மீடிங்கில்லையானல் சாப்பாடுகூடா வேண்டாம்னு படுத்துக்குவேன். அவ்வளவு அலுப்பாயிருக்கிறது.

கோவிந்தன்: இன்று சரியான வேலை எனக்கு. வெயிலிலேயேநிற்க வேண்டியதாய்ப் போய்விட்டது. கரி மூட்டைகள் வந்தன. அவைகளையெல்லாம் சரியாம் அடுக்கிவைத்து கணக்குகளைச் சரி பார்க்கவேண்டிய அவச்யமும் நேரிட்டது. யாராவது இப்போது பாடினல் காதார கேட்கலாம்.

நாராயணன்: கோபாலன் நன்ருய்ப் பாடுவான். பாடட்டும்.

கோபாலன்: போடா—உம் அப்பாடா என்கிறது உடம்பு—எப்படியடா பாடுவது—பெட்டியிருந்தாலாவது கொஞ்சம் பார்க்கலாம்—

நடேசன்: பெட்டிதானே இதோ கொண்டுவருகிறேன்—

கோபாலன்; எங்கிருந்து.

நடேசன்: எங்கிருந்தாவது கொண்டுவருகிறேன்—பாடினற் போதும்—

(போகிருன்)

நாராயணன்: பலே அப்படி வா—பலே--

[நடேசன்—பெட்டிகொண்டு வந்து வைக்கிருன். எல்லோரும் கோபாலன் பாடுவதைக் கேட்டுக்கொண்டு சந்தோஷமாயிருக்கிருர்கள். இச்சமயம் ராமனும் வந்து பார்த்து ஆச்சரியப்படுகிருன்,]

ராமன் : இப்படிப்பட்ட தமாஷ் வேண்டியதுதான். சங்கத்தில் இதற்கு ஏற்பாடு செய்யலாம். நேரமாயிற்று இனிமேல் மீடிங் நடத்தலாமா ?

எல்லாரும் : ஆஹா.

ராமன் : முதலில் சங்கத்தின் வரவு செலவு திட்டத்தை கவனிப்போம்—நமது சங்கம் ஆரம்பமாய்ச் சரியாய் ஒரு வருஷமாகிறது. இது வரையில் ஏற்பட்ட கணக்குகளெல்லாம் தனிக்கையாய்ச் சகல விவரங்களுடனிருக்கின்றன. இதை நீங்கள் அறிவீர்கள். ஆதலால் சங்கம் அடைந்த லாபத்தை மாத்திரம் படிக்கிறேன். அங்கீகரித்ததும் சங்கத்தின் அங்கத்தினருக்குத் தெரிவிப்போம்.

பலகாரக்கடை லாபம்	ரூ	500
சலவைச் சாலேயில்	,,	150
விறகுக்கடையில்	,,	160
தையற்கடையில்	,,	120
தேனீ வளர்த்ததில்	,,	84
ரிபேர் ஒர்க்ஷாப்	,,	306
ரொட்டிக் கிடங்கில்	நஷ்டம்	115

ஒருவன் : ரொட்டிக் கிடங்கில் நஷ்டமா ? ஏன் ?

ராமன் : ரொட்டி சுவையுடையதாயும் மிருதுவாயுமில்லே யென்கிற புகார்.

இன்னொருவன்: ஆமாம்—உண்மைதான்.

ராமன் : ஆதனுல் சரியாய் விலேயாகவில்லே அந்த குறையை இந்த வருஷத்தில் நீக்குவோம்

சுந்தரி: எல்லாவற்றையும் விடப் பலகாரக் கடையிலே தான் லாபம் அதிகமாய் வந்திருக்கிறது. அதை ஹோட்டலாக்கி விடலாம். நல்ல லாபம் வரும்—

ராமன். ஆமாம்—நானும் அப்படி யெண்ணினேன். நீயும் சொன்னுய்—அப்படியே செய்வோம்—இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் சங்க மெம்பரில் ஒருவனுன கணேசன்—கண்டு பிடித்து விட்டேன் ! கண்டு பிடித்து விட்டேன் !—என்று பலமாய் சொல்லிக்கொண்டே ஜனங்களைத் தள்ளிக் கொண்டு வருகிருன்.

ராமன் (பார்த்து) வா—வா — கணேசா — என்ன கண்டு பிடித்து விட்டாய் !

கணேசன் : ஒரு யந்திரம்.

ராமன் : ஓ அப்படியா ?

ஒருவன் : எங்கே அது ?

ராமன் : என்ன யந்திரம் ?

கணேசன். மரம்—பலகைகள் எல்லாவற்றையும் சுலபமாய் அறுக்கலாம் அதனுல்.

ராமன். ஒகோ அப்படிப்பட்ட யந்திரம் வேண்டியதுதான். எங்கே அது.

கணேசன் இதோ இருக்கிறது. வந்தாற் பார்க்கலாம்.

ராமன் அப்படியா—பார்க்கிறேன்,

நடேசன் விறகு வெட்டிச் சேர்த்துப்பின் சுமந்து கொண்டு வந்து சேர்ப்பது கஷ்டமாயிருக்கிறது. அந்த கஷ்டத்தை நிவர்த்திக்க ஏதாவது—

ஜேம்ஸ் : ஒரு Old Motor Lorry (பழைய மோடார் வண்டி) ரூ 150-க்கு கிடைக்கிறது. நான் ரிபேர் பண்ணிவிடுகிறேன். வாங்கிச் சங்கத்துக்கே உபயோகிக்கலாம் சௌகர்யமாயிருக்கும்.

ராமன : சரி—அதை நாளைக்கே வாங்கிவிடுவோம். நேரமாகிறது. இன்னொரு விஷயம். தினந்தோறும் வேலை முடித்தபின் மாலை வேளையில்—காலக்ஷேபமோ, சங்கீதக் கட்சேரியோ அல்லது உபந்யாஸமோ நடைபெற ஏற்பாடு செய்யலாம் என்கிற எண்ணம் எப்படி. Otherwise life is very dull (இல்லாவிட்டால் நம் ஜீவனம் சுருசுருப்பாயிராது).

எல்லோரும்- ஓ! நன்ருய் நடத்தலாம், மன நிம்மதியுண்டாகும்.

ராமன் : எல்லாம் நமது சங்க மெம்பருக்குள்ளே தான்—காசு கொடுத்து யாரையும் ஏற்பாடு செய்வதுகூடாது—

கோபாலன் : அது தான் நல்லது. மிஸ்டர் பிரஸிடெண்டு—நாளையதினம் நம் சுந்தரியின் பாதநாட்டியம்'

ராமன் : ஓ! வைத்துக்கொள்வோம். நல்ல யோசனை—சுந்தரி ஆடல் பாடல்களில் கெட்டிக்காரி—பள்ளிக்கூடத்திற் படிக்கும்போதே அவள் அதில் நன்ருய் பழகியிருக்கிருள்.

கோபாலன் : அது தெரியுமெனக்கு அதனுலேதான் சொன்னேன்.—

லட்சுமியம்மாள் : இந்த ஏற்பாடு எனக்குச் சுத்தமாய் பிடிக்கவில்லை. சதுராடுவது குடும்பஸ்த்ரீகளுக்கு அழகல்ல. அது நமக்கு ஏற்றதல்ல அது வேண்டாம்

ராமன் : அம்மா தாங்கள் அப்படி யெண்ணவேண்டாம். அது பரதநாட்டியமாகையினுல் சிறந்த வித்தைகளில் அதுவும் ஒன்ருகும். அது சாதாரணமான வித்தையல்ல. அதற்குப் புத்திமான்கள் பெருமைகொடுப்பார்கள். நாகரீகமிகுந்த இக்காலத்தில் இதைக்கொண்டாடுவார்கள்.

லட்சுமியம்மாள் : அப்படியா — நடக்கட்டும். (கூட்டுறவுச் சங்கப் பாடல்).

———

காட்சி 16.

இடம்: ஸ்ரீ புரத்தின் கிராமச் சாவடியின் முன்புறம்.

கிராமவாசிகள் தாங்கள் பயிரிட்ட தானியங்களை மூட்டை மூட்டையாகச் சுமந்து வந்துபோட்டு சிரமப்ரிகாரமாய் உட்கார்ந்திருக்கிறார்கள்.

வீரன். அண்ணேன் — என்னான்னாலும் படிச்சவங்களுக்குப் புத்தி அதிகந்தான்.

தோப்பளான்: அதைச் சொல்லணுமாங்கிரேன்—அதும்—நம்மசின்ன—மவராசா மாதிரி கர்வமில்லாமல் இருக்கிறாங்க சிலபேரு—அவுங்களைக் கடவுளாக் கும்பிடலாம்.

வீரன்: ஆமாண்ணே! சின்னமவராசா தங்கக்கம்பியல்ல—படிச்சோம்—பெரிய பரீச்சை கொடுத்தோம்—பணக்காரனாயிருக்கோம்—இன்னு நினைக்கிறா பாரு—நம்மோடு ஒருத்தராயிருக்கிறாரு—பாடும் படாரு—

காத்தான்: அவுங்க அப்படியிருப்பதனாலேதான் நமக்கெல்லாம் வேலைமேலே இருக்கிறப்போ மலைப்பு தோணல்லே—சந்தோசமா—சங்கத்துக்காக உழைக்கிறோம்—சந்தோசமா சாப்பிடறோம்.

துரைச்சிங்கம்: அது இருக்கட்டும்! இப்போ விளைவெப்படி அதிகம்தான்—இல்லையா?

காத்தான்: ஆமாப்பா—அதென்னவோ உண்மை.

வீரன்: ஆமாம்டா—நடக்கிறவன் காலிலே சீதேவி—படுகிறவன் காலிலே மூதேவி! பாடு படுகிறோம்—பயனடைகிறோம். சின்ன மவராசா முந்தாநாள் ஏர் ஓட்டினாரு—தெரியுமா உனக்கு?

காத்தான்: அது என்ன அதிசயம் சொல்லவந்தே ஒருநாள்—அவர் என்னைக்கண்டு (யோசனை) எங்கவூட்டே பசுக்கன்னுபோட்டதுபாரு அன்னைக்கு எத்தமேலே ஓட்டினாரு—பாரு—

வீரன்: கெட்டிக்கார மனிசன். சின்ன மவராசா இந்தச் சங்கம் வச்சதிலிருந்து அவுங்களுக்கு நல்ல மதிப்பு ஊரிலே—எல்லோரும் சங்கத்தையும் அவரையும் கொண்டாடாங்க.

துரைச் சிங்கம்: ஆமாமா சங்கத்திலிருந்து எரு—சாலு—உழவு—கலப்பே—மாடு—எருவு, எல்லாம் கிடைக்கும்படி யல்லவா ஏற்பாடு செயிதிருக்காரு—எப்படிப்பட்ட உதவியது.

காத்தான் : நாம் கஷ்டப்பட்டுத் தண்ணீர் இறைக்கும்போது பாத்தார் சின்ன மவராசா—சங்கடப் படாரு—அதனாலே ஒரு இன்ஜின் வாவழைக்கப் போறாராம் சங்கத்துக்காக அது தண்ணி இறைக்குமாம் தானே—பேசிக்கிறாரு—

வீரன் : அவரெல்லாம் செய்வாரு—நம்ம தெய்வமே நமக்குச் சகாயம் செய்ய மனிசனா வந்திருக்கு. இப்போ பெரிய மவராசா-சின்ன மவராசாவுக்குக் கல்யாணம் செய்துவைக்கணும் இது தகுந்த வய்சு—நல்லாயிருக்கும்—நாமும் பார்க்கலாம்—சந்தோஷப்படலாம்.

ஜமீன்தார் : (வெளியே வந்து எல்லோரையும் பார்த்து) நான் வேறு வழியாகச் சற்று முன் சுந்தரத்தைத் தேடிக்கொண்டு வந்தேன். நான் வந்தது உங்களுக்குத் தெரியாது. சின்ன மகாராஜாவைப்பற்றி நீங்கள் பேசிக்கொண்டதை நான் காதாரக் கேட்டேன். சந்தோஷமடைந்தேன். உங்களிஷ்டப்படி சின்ன மகாராஜாவுக்குச் சீக்கிரத்தில் விவாகம் செய்து வைக்கிறேன் நீங்கள் பார்த்து சந்தோஷப்படலாம்—

வீரன் : ஐயா—சந்தோஷம் — கல்யாணத்திலே எங்களைக் கொஞ்சம் மறக்கப்படாதுங்க. வடை பாயஸத்தோடே—(வயிற்றைக்காட்டி) கவனிக்கணும்—ஏளுங்க.

ஜமீன் : அடாடா—உங்களுக்குச் சாப்பாடில்லாமலா—உங்களுக்குத்தான் முதலிற் பந்தி—

காத்தான் : அடே வீரா—(இடுப்புத் துணியைப் பிடித்துக் காட்டி) கேளு—

வீரன் : ஐயா—

ஜமீன் : தெரிந்தது. ஒருவர் தவறாமல் பட்டு கரை வேஷ்டி வாங்கித்தாரேன். உங்கள் சந்தோஷந்தான் எங்கள் பாக்யம்.

இச்சமயம் சுந்தரம் ஒரு பிரபுவுடன் பிரவேசிக்கிறான். ஜமீன்தார் அவரை வரவேற்கிறார். அவர்கள் வந்தனம் செய்கிறார்கள். குடிகள் எழுந்து கும்பிடுகிறார்கள்—

சுந்தரம் : ஏ காத்தான் மூட்டைகளெல்லாம் வந்து விட்டனவா.

காத்தான் : கொணாந்துட்டோம் சாமி!

பிரபு : இந்த மூட்டைகளை யெல்லாம் ஏன் இங்கே வாவழைக்கிறாய்.

சுந்தரம்: விளையும் தானியங்கள் இவ்விடத்துக்கு வரவழைத்து சேமித்து வைத்திருந்து நல்ல விலை வரும் சமயம் பார்த்துச் சங்கத்தின் மூலமாக விற்றுப் பணமாக்குவது.

பிரபு: அப்படியா—ஓஹோ—நல்ல ஏற்பாடு.

சுந்தரம்: பணக்காரர்களை ஏழைக் குடியானவர்களுக்கு அறுவடை காலத்தில் இந்த விலைக்குத் தானியம் அளிக்க வேண்டும் என்கிற நிபந்தனையின்பேரில் பணம் கடன் கொடுப்பார்கள். அந்த விலையானது மிகவும் ஈனக்கிரயமாக விருக்கும் அப்பால் அறுவடை காலத்தில் அந்த ஈனக்கிரயத்துக்கே குடியானவர்கள் தானியத்தைப் பணக்காரருக்குக் கொடுத்து நஷ்டமடைவார்கள். அந்த கஷ்டம் நிவர்த்தியாய் விடுகிறது இந்த ஏற்பாட்டில்—

வீரன்: ஆமாங்க எஜமான்—பணக்காரனுங்க மார்வாடி மாதிரி எங்க கழுத்தை அறுத்தானுங்க அவுங்க கொட்டம் அடங்கிச்சு—

பிரபு: அப்படியா—நல்லது—இந்த மாதிரியான கூட்டுறவுச் சங்கம் தேசத்தில் ஆங்காங்கு ஏராளமாய் ஏற்படவேண்டும். எல்லோரும் சுகமாய் வாழலாம். நானும் என் கிராமத்தில் இந்தச் சங்கத்தை ஸ்தாபிக்கிறேன்.

*பிரபு: ஏனப்பா சுந்தரம் நீ சொல்ரதெல்லாம் சரிதான், நல்ல ஏற்பாடாத்தான் இருக்கிறது. ஆனால் சங்கத்தார் விவசாய வேலை இல்லாக் காலத்தில் என்னவிதமாக ஜீவிக்கிறார்கள். சுந்தரம் நீ வந்து உதவி செய்யணும்——

சுந்தரம்: அதற்கு நாங்கள் என்ன செய்திருக்கிறோமென்றால் சொல்றேன் கவுனியுங்கள்!

விவசாயிகள் வேலை இல்லாக்காலத்தில் தேனீ வளர்த்து, நல்ல நெய் தயாரித்து, ஆடு மாடுகளை விர்த்திசெய்து, கோழிகள் வாத்துகள் இவைகளை வளர்த்து லாபமடைகிறார்கள். இதுகள் மாத்திரம் அல்ல. இன்னொரு முக்கியமான சமாசாரம் சொல்ல மறந்துவிட்டேன். அதையும் கேளுங்கள் எங்கள் கிராமத்தில் அநேக ரயத்துகளுக்கு நிலங்கள் ஒரே தாக்கில் இல்லாமல் பலவிடங்களில் இறுதாக்கைளாக பரவி இருந்தன. அதனால் ஒரே ரயத்து தன்னுடைய நிலங்களுக்கு போதுமான கவனிப்பும் பாதுகாப்பும் செய்யமுடியவில்லை. ஆதலால் ஆங்காங்கே ஒவ்வொருவருக்கும் சௌகர்யமானபடி சமீபத்திலுள்ளவர்களுக்குப் பிரித்துக் கொடுத்து ஒவ்வொரு

வருக்கும் ஒரே இடத்தில் நிலங்கள் இருக்கும்படி ஏற்பாடு செய்து விவசாயம் செய்துகொண்டார்கள்- அதிலில் விளைவு அதிகரித்தது விவசாய சிலவு குறைந்து சங்கத்தார்களுக்குள் பலமான ஒற்றுமையும் ஏற்பட்டது. கேளுங்கள் பஞ்சாப் தேசத்தில் இந்த ஏற்பாடு பிரபலமாய் நடந்துவருகிறது. இம்மாதிரி நம் ஊர்களிலும் நடத்தினல் கிராமவாசிகள் நலம்பெறுவார்கள் என்பதில் சந்தேகமே இல்லே.

சுந்தரம் : ஒ தவருமல் வருகிறேன். இந்தச் சங்கத்தில் லாபமிருப்பதோடு ஒற்றுமைக்கும் வழியிருக்கிறது.

மருதப்பன் : (ஒரு கோழியுடன் பிரவேசித்து) எசமான் நீங்க சொன்னுப்போல கோழி வாங்கி வளர்த்தேனுங்க எல்லாம் செத்துப் போகுதுங்க தீனி தின்னுமே; பிளேச்சிருக்கும் ஒன்று இரண்டுகூட தோலு முட்டை இருதுங்க—

சுந்தரம் : அப்படியா—வீரனும் மிப்படித்தான் சொன்னுன். வைத்யம் சொன்னேன் செய்தான்—அதைக் கேளு.

வீரன் : (மருதப்பனேப் பார்த்து) அண்ணேன். எங்க வீட்டுக் கோழியும் இப்படித்தான் தோலு முட்டை இட்டுது சும்மா—கோழிக்குச் சுண்ணும்புத் தரையிலே தீனிவைக்கச் சொன்னரு—வைச்சேன் பாரு—இப்போ எல்லாம் நல்லா இருக்கு. நல்ல நல்ல முட்டை இடுது.

மருதப்பன் : அப்படியா—ஏ ஆயா சுண்ணும்பிலே சூச்சுமம் எம்பாங்க;—அது சரியாயிருக்கு.—

கறுப்பன் என்பவன் குடித்துவிட்டு அந்த வெறியால் இவர்களிருப்பது தெரியாமல் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் வருகிருன். எல்லோரும் பார்த்து சிரிக்கிருர்கள்.—

சுந்தரம் : (பார்த்து) இவன் எத்தனே நாளாய்க் குடிக்கிருன். இப்படி—

வீரன் : இவன் வெகு நாளாகக் குடிக்கிருனுங்க. குடிச்சுக் குட்டிச் சுவராப் போருணுங்க! பெஞ்சாதி பிள்ளேங்க சாவுது.

சுந்தரம் : செ—செ—நான் இந்த செய்கையை வெறுக்கிறேன், நமது சங்கத்திற் சேர்ந்தவர்களில் யாரும் குடிப்பது கூடாது—தெரிந்ததா? இவனுக்கு நல்ல வார்த்தை சொல்லி அப்பாலே அழைத்து போ—நாளேக்கு என்னிடம் அழைத்துவா கண்டுக்கிறேன். நேரமாயிற்று—நாளேக்குப் பார்ப்போம்—

வீரன் : நல்லதுங்க—என்று கூறிக் கறுப்பனைச் சமாதானப் படுத்தி அழைத்துக் கொண்டு போகிறான். பிரபுவும் சுந்தரத்திடம் விடைபெற்றுச் செல்கிறார். யாவரும் பிரிகின்றனர். சுந்தரமும் அவன் தகப்பனாரும் தனியே இருக்கின்றனர்.

ஜமீன் : சுந்தரம், நானேன் இங்கே வந்தேன் தெரியுமா.

சுந்தரம் : தெரியும் கல்யாண விஷயமாகத்தானே—தங்களிஷ்டப்படி கல்யாணம் செய்து கொள்கிறேன். ஆனால் பெண்—

ஜமீன் : உனக்குத்தெரிந்த பெண் இருந்தால் சொல்லு—

சுந்தரம் : என் தோழன் ராமனுடைய தங்கை சுந்தரியை மணம்செய்துகொள்ள மனம நாடுகிறது.

ஜமீன் : நல்ல குணவதி அந்தப்பெண்—குலமும் நல்ல குலம்—பழகிய இடம்—ஆனால் பரம தரித்திரம்—

சுந்தரம் : ஓகோ—அந்த வித்தியாஸந்தான் நம்மைக் கெடுக்கிறது. குலநலத்தையும் குணநலத்தையும் கவனியுங்கள்.

ஜமீன் : ஆஹா—நல்லது. நாளைக்கே பட்டணம்போய் அவர்கள் சம்மதம் கேட்டுவருவோம்.

சுந்தரம் : நல்லது—

காட்சி 17.

இடம்: சென்னையில் கூட்டுறவுச்சங்கக் காபி ஹோட்டலின் முன் வாசல்.

காபி ஹோட்டலில் காபி சாப்பிட்டு வெளியே வந்தவர்களின் சிலர் கூடிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

முதலாமவர்: நல்ல—நல்ல — ஏற்பாடுகள் — திருப்திகரமாயிருக்கின்றன.

இரண்டாமவர்: இருக்கட்டும்—சுந்தரி என்கிற சிறு பெண் காட்டும் மரியாதையும் அப்பெண்ணின் சுறுசுறுப்பையும் விசாரணை செய்யும் நேர்த்தியையும் கவனித்தீர்களா?

மூன்றாமவர்: கவனித்தேன்—புகழ ஒரு வாய் போதாது. அது ஒரு ஏழைவீட்டுப் பெண்ணும்—அந்தப் பெண்ணின் தமையனார் ஒருவரிருக்கிறார். அவர் எம். ஏ. பாஸ் செய்தவராம். அவரும் இந்த ஹோட்டலில் ஒருவேலைக்காரர்—

முதலா: ஓகோ அப்படியா—இப்படி பல துறைகளிலும் சங்கம் ஏற்படுமானால் வேலையில்லாத் திண்டாட்டம் தலைகாட்டாது.

நானகா: அப்போதுதான் உலகம் க்ஷேமப்படும். இந்த ஹோட்டலில் நாம் செலவழிக்கும் பணத்துக்கு இரண்டு நன்மைகளுண்டு. அது சூட்சுமமாய்க் கவனிப்பவர்களுக்குத்தான் தெரியும். ஒன்று நல்ல உணவு. மற்றொன்று—தினந்தோறும் மாலையில் நடக்கும் சங்கீதக் கச்சேரி.

இனனொருவர்: ஆம் அது உண்மை. சங்கீதக் கச்சேரிமட்டுமல்ல. சில சமயம் பரதநாட்டியம்—சிலசமயம் காலக்ஷேபம்.

இப்போது ஹோட்டல் வேலைக்காரச் சங்கரன் இங்கிருக்கும் ஒருவர்பக்கம் வந்து—ஐயா நீங்கள் உங்கள் பில்லுக்குப் பணம் செலுத்துகையில் மானேஜர் மேஜையின்மேல் இந்தப் பணப்பையை மறந்தாற்போல் வைத்துவிட்டீர்களாம். இந்தாருங்கள்—

(பணப்பையைக் கொடுக்கிறான்).

அவர் (பெற்றுக்கொண்டு) ஓ! ஆம்—மறந்துவிட்டேன். (Thanks).

சங்கரன் : நமஸ்காரம்— வருகிறேன்.

பிரபு: இந்தா (ஒரு ரூபா தருகிறார்).

சங்கரன் : (வாங்க மறுத்து) யாரிடமும் எங்க சங்கத்திலுள்ள எவரும் எந்த வெகுமதியும் வாங்குவதில்லை ஐயா. நான் இங்கே ஒரு சிப்பந்தியாய் வேலைசெய்தபோதிலும் இந்தக்கூட்டுறவு சங்கஹோட்டலின் மற்ற அங்கத்தினரைப்போல எனக்கும் சங்கத்தில் பாத்யதையும் பொறுப்புமுண்டு. போய்வருகிறேன்—

(போகிறார்கள்).

காட்சி 18.

இடம் : காபி ஹோட்டலில் வேறுபக்கம்.

(சதுராட்டம் ஆரம்பிக்கிறது.)

எல்லாரும் கூடியிருக்கின்றனர். இங்கே கிருஷ்ணசாமியும் வந்திருக்கிறான். சுந்தரி சதுராடுகிறாள். கிருஷ்ணசாமி சுந்தரியின் நடனத்திலும் அழகிலும் மோகங்கொண்டு அதை அபிநயிக்கிறான். பலர் கவனிக்கின்றனர். ஆட்டம் முடிகிறது. நடனத்திற்குப் பிறகு சுந்தரி ஒருபக்கம்போய் சிரமபரிகாரம் செய்துகொள்ளுகிறாள்.

கிருஷ்ண : (அவள் முன்போய் நின்று) சிரமமாக்கும்—பாவம்! இருக்கும்! நீ நடித்தபோதெல்லாம் நான் திருவாரூர் ஞானத்தின் ஞாபகமாகவேயிருந்தேன். Well done (பலே பேஷ்) Congratulation (நான் உள்ளபடி மெச்சுகிறேன்).

(கையைப் பிடித்துக் குலுக்கப்போகிறான்).

சுந்தரி : (சற்று பின்வாங்கி நின்று இருகாங்களையும் சேர்த்து கும்பிட்டு) நமஸ்காரம்.

கிருஷ் : (காதற்பார்வையுடன் அவளருகிற் சென்று) சுந்தரி ஏன் இப்படிச் செய்கிறாய்? நான் என்ன அவ்வளவு வேண்டாதவனா!

சுந்தரி : அப்படியல்ல! நீங்கள் வித்தையில் அபிமானங்காட்டி வித்தையைச் சிலாகித்துப் பேசினீர்கள். நானதை வந்தனபூர்வகமாக ஏற்றுக்கொண்டேன். இதுதான் முறை!

கிருஷ் : போகட்டும்! வாயேன் பீச்சுக்குப் போகலாம். அங்கே தமாஷாக இருந்து சிரமபரிகாரம் செய்துகொள்ளலாம். இதோ வாசலில் நம்முடைய காரிருக்கிறது.

சுந்தரி : (கோபத்துடன்) ஐயா! ஏன் இந்த எண்ணம்—இப்போது. ஒழுங்காக முதலில் கைகுலுக்க வந்தீர்—இப்போது இவள் கல்யாணமாகாத கன்னிகையாயிற்றே என்றெண்ணாமல் வெளியே அழைத்துப்போகப் பார்க்கிறீர். போதும் உம்முடைய பெரிய மனுஷ்யத்தனம்! போதும்! மரியாதையாய்ச் சொல்கிறன். தயைசெய்து இவ்விடம் விட்டுப்போம்.

கிருஷ் : (போய்த் தடுத்து) சுந்தரி நில், சற்று! என்னைப்பார்! ஒரு வார்த்தை! கோபிக்காதே! உனக்கு வாழ்வுதானே வருகிறது; தள்ளாதே.

சுந்தரி: ஐயா! செய்கை கரை கடந்து போகிறதே—வேண்டாம்! வேண்டாம் இந்தச் சேஷ்டை.

ஆநந்த: (பிரவேசித்து) மாஸ்டர் கிருஷ்ணசாமி சகலமுமறிந்த தங்களுக்கு இது அழகல்ல! மரியாதையாய் வெளியேபோங்கள்.

(சுந்தரி செல்கிருள்)

கிருஷ்: அடே ராயா! உன் யோக்யதையை நானறிவேன். இரு! உங்கனேயும் உங்கள் ஹோட்டலேயும் என்ன செய்கிறேன் பார்! காப்பி ஹோட்டலா இது சோம்பேறி மடமல்லவா? இதில் உனக்கு வாழ்வா?—பேச்சா—கவனிக்கிறேன்.

(All laugh, and Krishnaswamy feels insulted and exits).

காட்சி 19.

இடம்: கிருஷ்ணசாமியின் வீடு.

காலம்: காலே.

கிருஷ்ணசாமி தன் நண்பர் நாலுபேருடனிருக்கிருன். Caste elders (இனத்தின் முதியோர்) சிலரும் இருக்கின்றனர்.

கிருஷ்: வெட்கக்கேடான செய்கைகள் பல நடக்கின்றன ஊரில்! அவைகளில் நம்ம ராமன் தன் தங்கை சுந்தரி என்பவளே நாட்டியமாடவைத்து ஜீவனம் செய்ய ஆரம்பித்து விட்டான்! அது ஒன்று! இது தெரியுமா உங்களுக்கு?

ஒருவர்: இது என்ன கூத்து? நம்ம—எம்-ஏ-ராமனு! லட்சுமியம்மாளின் மகனு!

கிருஷ்: இதோ இங்கிருக்கிருரே கிழவர் இவருக்கு நெருங்கிய பந்து ராமன். (கிழவரைப்பார்த்து) தாதா ராமன் உங்களுக்கு என்ன வேணும்!

கிழவர்: (கம்மிய குரலுடன்) என்ன வேணும்—அப்படி நெருங்கிய உறவு எதுவுமில்லே. என் மச்சினிக்கு ஒண்ணு விட்டு அக்காள் ராமன் அம்மாள் இதுதான்—அவன் எக்கேடு கெட்டாலும் எனக்கொண்ணுமில்லே. என் மண்டையைப் போட்டு உருட்டாதேயுங்கள்—

கிருஷ்: அதற்கில்லே தாதா—அவன் இப்படிப்பட்ட தொழிலில் இறங்கலாமா! இது ஜாதி யாசாரத்துக்கடுக்குமா!

கிழவர்: பரம தரித்திரம் பிடுங்கித் தின்கிறது. அதனுல் இப்படி ஆரம்பித்திருக்கிருன்—கோண எழுத்து வாசித்தவர்களுடைய ஏற்நவீனு நாகரிகர்களென்று சொல்லிக் கொள்கிருர்களே அவர்களுடைய யோக்யதை யெல்லாம் இப்படித்தான். அவாளேக் கேட்பதார்?

கிருஷ்: ஆஹா என்ன ஆச்சரியம்! ராமன் செக்குலக்கை மாதிரி திரிகிருன்-அவனுடைய தாயார் பெரிய தாடகை-இவர்களுக்கென்ன கேடு—உழைக்கட்டுமே—கல்யாண மாகாத பெண்ணே அடாடா என்ன சொல்வேன்—பெரிய பெரிய தடியன்கள் கூடியிருக்குமிடத்தில் கூத்தாட வைத்துப் பிழைக்கிருர்களே! சை—இந்த பெண்ணேக் கல்யாணம் செய்துகொள்ள யார் முன் வருவான்?

போகட்டும் இந்த தடிராமனுக்குத் தான் யார் பெண் தர முன் வருவார்கள் ?

கிழவர் : இது குலத்துக்குப் பெருங்குறைவு தான்—என்ன செய்யலாம் ? இந்த காலத்துக்கு இதுதான் அழகு—

கிருஷ : தாதா, நீங்க ஒரு வார்த்தை சொல்லுங்கோ இந்த மாதிரி நம்ம ஜாதியின் கௌரவத்தை நாசமாக்கும் இந்தப் பசங்களை ஒழிச்சுடரேன் !

கிழவர் : அப்பா நீ என்ன வேணுமானாலும்—செய் ! நான் உன்னுடைய செய்கையை ஆதரிக்கிறேன் ! நம் குல கௌரவத்தை நிலை நிறுத்தினா சரி ?

கிருஷ் : ஆனல்—நீங்கள் நாலு பெரியவர்கள் கூட என்னோடு வாருங்கள். இப்படி நடக்க இடங்கொடுக்கக் கூடாது—தாதா ! இவர்களையும் இவர்கள் வைத்திருக்கும் ஹோட்டலையும் இருக்கும் இடந்தெரியாமற் செய்ய இதோ இன்றே புறப்படுகிறேன் !

(இப்போது வண்ணான்களிருவர் பிரவேசித்து கும்பிடுகிறார்கள்)

கிருஷ் ; வாங்கடாப்பா—இப்போதுதான் நாளகப்பட்டதாக்கும் இந்தப் பக்கம் திரும்ப ?

வண்ணான் : இல்லைங்க—ஓயாதமழையிலே—துணி துவைக்க—காயப்போடஒண்ணுந் தோதுப்படலேங்க ? அது தான் !—இல்லாட்டி எசமான் வூட்டுக்கு வரத்துக்கென்ன !

கிருஷ் : போகட்டும் ; துணி கொணாந்தீங்களா.

வண் : கொணாந்தோம் ! ஒரு சேதிங்க !

கிருஷ்ண : என்ன ?

வண் : இந்த ஊரிலே சங்கமின்னு வச்சு வாளராங்களே ! கொஞ்ச நாளா—அவுங்களாலே எங்க பிழைப்பு நாசமாப் போகுது ! நாங்கள் என்ன செய்கிறது இதற்கு ?

கிருஷ்ண : அவுங்க என்ன செய்ராங்க உங்களை ?

வண் : எங்களவங்க பலபேரை இசுத்துக் கிட்டாங்க—அதல்லாமே—எங்க சலவை நல்லா இல்லையாம் ! துணியைக் கிழிச்சிவிடராமாம் ! எங்களைத் துரத்தாங்க பாவிங்க !

கிருஷ : போகட்டும்—ஒரு காரியம் செய்யறேங்களா ? (இரகஸ்யமாய்) இந்தச் சங்கம் இவ்வளவு தூரம் ஆடுவதற்கெல்லாம்

சங்க ஹோட்டல் ஒன்று வச்சு—அதிலே ஒரு ராயனே வச்சிருக்காங்க !—அவன் தான் காரணம் ! அவனேயும் அந்த ஹோட்டலேயும் அதமாக்கணும் ! செஞ்சீங்கன்ன ! நீங்க மனுசன்.

வண் : ஆமாங்க — அதுக்கு — எசமான் துணையில்லாட்டி ஆகுங்களா ? கொஞ்சம் கை கொடுங்க பயலுகளுடைய சாமர்த்தியத்தைப் பாருங்க.

கிருஷ் : சரி—நான் துணையாய் வருகிறேன் ! இந்தா ரூபா 5 இதை எடுத்துக் கிட்டுப்போய்—நல்ல தண்ணி சாப்பிடுங்க ! பத்துப் போர வாங்க அங்கே—இதோ நானும் வாரேன் தகுந்த முஸ்தீப் போடே ! — தொலேப்போம் போங்க நிக்காதேயுங்கள் சமயத்துக்கு வந்தீர்கள் !

(ரூபாயை விட்டெறிகிருன்)—

வண் : (எடுத்துக்கொண்டு) இதோ வாரோம் ! இதோ !

(போகிருர்கள்)—

———

காட்சி 20.

இடம் ; சென்னையில் சங்க ஹோட்டல்.

காலம் : முன் இரவு.

ஹோட்டலில் எல்லோரும் கவனமாய் வேலை செய்கிருர்கள். இச்சமயம் ஸ்ரீபுரம்—ஜமீன்தாரும் அவர் மகன் சுந்தரனும் பிரவேசிக்கிருர்கள். ஜமீன்தாரைக் கண்டதும் ராமன்—ஆநந்த ராவ்—லட்சுமியம்மாள் யாவரும் வணங்கி வரவேற்கின்றனர்—

ஆநந்த : தங்கள் வரவால் இந்த இடம் பரிசுத்தமடைந்தது !

ராமன் : நாங்கள் பாக்யமடைந்தோம்.—

ஜமீன்தார், (ராமனையும் அவன் தாயாரையும் ஒரு பக்கம் அழைத்துக் கொண்டுபோய்) நம்ப சுந்தரம் சுந்தரியை விவாகம் செய்துகொள்ள பிரியப்படுகிறன். உங்கள் இஷ்டம் எப்படி ?

லட்சுமியம்மாள் : ஆஹா என்ன ஆச்சரியம் ! எங்கள் நிலையைத் தாங்கள் அறிவீர்கள் இருந்தும் எங்களிடம் இவ்வளவு அபிமானம் வைத்திருப்பது எங்கள் அதிர்ஷ்டம்தான்—சுந்தரி பாக்யசாலிதான்—

ராமன் : என் ஆப்த ஸ்நேகனுக்கு என் சகோதரியை மணம் செய்விப்பதில் எனக்கு பரமசந்தோஷம்.

ஜமீன் : சுந்தரம் பணக்காரர் வீட்டு பெண்களை யெல்லாம் லட்சியம் செய்யவில்லை. சுந்தரியின் குணத்தில் ஈடுபட்டதுமல்லாமல் ஏழைகளுக்கு உதவிசெய்யவேண்டுமென்கிற கொள்கையில் என்னைத் திருப்பிவிட்டான். பிராப்தவசமிதெல்லாம்.

லட்சுமியம்மாள் : ஆம்—சுந்தரி — (சுந்தரி வர) உன்னை அடைய பாக்யம் தானேதேடிவந்திருக்கிறது. என்ன சொல்கிருய் ?

சுந்தரி : எல்லாம் பெரியாருடைய ஆசீர்வாத பலன் (என்று கூறிக் காங்குவித்துக் கும்பிடுகிருள்).

ஜமீன் : நல்லது, சந்தோஷம் உங்கள் சம்மதம் கேட்கத்தான் வந்தேன் ! ராமு—சரிதானே.

ராமன் : நானென்ன சொல்லப்போகிறேன். நல்ல வேளை வந்துவிட்டது. நடக்கிறது.

ஜமீன்: சரி சந்தோஷம்—இனி உங்கள் வேலையைக் கவனி யுங்கள்—நான் வருகிறேன். என்ன சுந்தரம் நீ வரவில்லையா!

சுந்தரம்: அப்பா நீங்கள் போங்கள்—நான் இதோ வந்துவிட் டேன்.—

இச்சமயம் கிருஷ்ணசாமியின் தூண்டுதலால் வந்த வண்ணான் கள் வெளியே வந்து குடி வெறியினால் ஆடல் பாடலுடன் வாயில் வந்தபடி பேசுகிறார்கள்.

ஒருவன்: ஏ ஓட்டல்கார பயலுங்களே வாங்கடா வெளியே. வாங்க—

இன்னொருவன்: எவுங்க வந்தாலும் அவுங்களே துணி தொப் பாரப்பலே சும்மா தொப்பி அனுப்பணும் தெரிஞ்சுதா.

மூன்றுமன்: (மீசையை முறுக்கி) உம்—(என்று) உட்டெரி இதுங்களே. பயமவனுங்களுக்கு—ஓட்டலு—நாக்காலி! காபி! இட்டலி! உம்—வாங்கடா (கூவுகிறான்.)

இச்சமயம் இச்சத்தம் கேட்டு ஆநந்த ராவ்—கோபாலன்— நடேசன்—மற்றும் சிலர் யாவரும் வெளியே வருகின்றனர்.

ஒருவன்: அடே எங்க தொளிலேக் கெடுத்த உங்களேயும் ஓட் டலேயும் இதோ பாருங்க—நொடியிலே—

கிருஷ்: (பிரவேசித்து) உம்—வேலே நடத்துங்க.

ஆநந்த: அடே கிருஷ்ணசாமி, இது உன் வேலேயென்று தெரிகிறது, வேண்டாமிதெல்லாம்.

கிருஷ்ண.—அடே இன்னேக்குத் தப்ப முடியாது நீ! உன்னு லானதைப்பார், சுந்தரி! இப்போதென்ன செய்வாய் — என்று சொல்லிக் கொண்டே அவளிடம் போகிறான். அவனேச் சுந்தரம் தடுத்து—கிருஷ்ணசாமி வேண்டாமிதெல்லாம்—கவனி—என்கிறான்.

இச்சமயம் ஹோட்டல் வேலேச்காரர்களுக்கும் வண்ணான்களுக் கும் சண்டை பலக்கிறது. அவர்களுக்கு நடுவிலிருந்த ஆநந்தராவை வண்ணான்களிலொருவன் மண்டையில் பெரிய தடியால் அடித்து விடுகிறான். ஆநந்த ராவ்—ஆ செத்தேனே! என்று கீழே விழுகி றான். உடனே எல்லோரும் போலீஸ்! போலீஸ்!! என்று கூவுகிறார் கள். போலீஸ் வந்து கிருஷ்ணசாமியையும் இன்னும் சிலரையும் கைது செய்கிறது.

ஆநந்த: ஹா—ராமு!—ராமு!!

ராமன்:—அண்ணா—என்ன—என்ன.

சுந்தரம்:—ஐயோ அண்ணாவைப் பிடியுங்களேன்—இது என்ன ரத்தம் அந்தப்பாவி கிருஷ்ணசாமி தான். ராமண்ணா! ஓடு—ஓடு சீக்ரம்—ஒரு டாக்டர்.

(டாக்டரை அழைத்து வர ஒருவர் ஓடுகிறார்.)

ஆநந்த: அம்மணி சுந்தரி! சுந்தரம்!!—என் உங்களுக்கு வீண் 'ப்ரயாஸம்' ஆ!—ஆ!! — (வலி பொறுக்க முடியாமல் அவஸ்தை) நான் இனிப் பிழைப்பது கஷ்டம் அம்மா சுந்தரி, இப்படி வா—என்னைப்பிடித்துக்கொள்—ஆ—அப்படி—சற்று மூச்சு விட முடிகிறது—ஆ!

சுந்தரம்: அண்ணா—அண்ணா—என் பயப்படுகிறீர்! இதோ பாரும் சுந்தரி கண் கலங்குகிறாள்.

(ஆநந்த ராவுக்கு மூச்சுத் திணருகிறது. அவர் மரணமடைவது நிச்சயமென்று தெரிகிறது.)

சுந்தரி: (கவலை. ஆச்சரியம்—அழுகை இவற்றுடன்) அண்ணா கொஞ்சம் வாயைத் திறவுங்கள். இந்தப் பாலில் ஒரு சொட்டு விடுகிறேன்.

ஆநந்த: சுந்தரம்! அன்று நான் புனர் ஜன்மமெடுத்தேன் சமுத்திர கரையில்—என்ன சொல்வேன். பெற்ற பிள்ளையால் கைவிடப்பட்டேன். பெண்ணால் வெறுக்கப்பட்டேன். ஐயோ உத்யோகத்தைப் பறிகொடுத்து அநாதையானேன். அபாண்டமாகக் குற்றஞ்சாட்டப்பட்டு லோக நிந்தனைக்கும் ஆளானேன். மானத்தையும் இழந்தேன். மதியையும் துறந்தேன், உலகத்தையும் வெறுத்தேன். த்வேஷ புத்தியினால் இந்த உலகமே பற்றி எரியாதா என்று கருதினேன். வஞ்சனைகளுக்கும் துரோகத்துக்கும் இருப்பிடமான கூடகோபுரங்களும் என்னை விரட்டியடித்த மாடமாளிகைகளும் தரைமட்டமாகாவா—என்ற குரூர எண்ணமும் எண்ணினேன்: அப்பால் பலவிதமாகச் சுழன்று கொண்டிருக்கும் என் மனதில் இன்னதென்று சொல்ல முடியாத எண்ணங்கள் ஊடாடின. சுந்தரம் நீ என்னை மாற்றிவிட்டாய், என்னைக் காப்பாற்றினாய் நான் உன் வசமா

னேன் புதிதும் பரிசுத்தமுமான ஒரு தனி வாழ்க்கையில்—என்னை மாற்றினாய் !—ராமு, சுந்தரம் இருவரும் இப்படி வாருங்கள் என் அருகில். சுந்தரி நீயும் வா இப்படி—உங்களைத் தவிர எனக்கு வேறு பந்துக்களில்லை. ராமு ! உத்யோகமில்லாமல் கஷ்டப்பட்ட என்னை உத்யோகஸ்தனாக்கி ஆதரித்தவன் நீ ! சிறைவாசமிருந்து பெருமையை யிழந்த எனக்குப்பெருமை உண்டாக்கினாய், நீயே என் குரு ! நீயே என் தெய்வம் !!

ராமு : அண்ணா, என்ன வார்த்தையிது— (அழுகிறான்)

ஆநந்த : ராமு அப்படியில்லை கேள்—எனக்கு மாத்திரமா நீயும் சுந்தரமும் விமோசனமுண்டாக்கினீர்கள். இந்தப் பட்டணத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு விமோசனமளித்தீர்கள் எல்லோரும் உங்கள் பெயர் சொல்லி வாழ்கிறார்கள். ஏழைகளிடம் வறுமையும் துன்பமும் போகும்படி செய்து, அவர்களுடைய பலத்தையும் உத்யோகத்தையும் கெடுத்து அவர்களுடைய இரத்தத்தைப்பருகி வரும்—Capitalism—(முதலாளிகள்) தலையெடுக்க வொட்டாமல் தடுத்தீர்கள். நாகரீகத்துக்கு நஞ்சாய் புராதன வழக்கங்களைப் பாழாக்கி வரும்—Comunalism (கம்யூனிலிஸம்) என்னும் கலகக்காரர்களை வீழ்த்தி பரிசுத்தமான கூட்டுறவுச் சங்கத்தை ஸ்தாபித்தீர்கள் கைத்தொழிலின் கௌரவத்தை நிலைநாட்டினீர்கள். விவசாயத்தினுடைய பெருமையை அறிந்து விவசாயக் கூட்டுறவுழைப்பினால் கிராமங்களெல்லாம் சுபீக்ஷமடையும்படியான தேச சேவை செய்தீர்கள்—எனக்கு மயக்கமாயிருக்கிறது.

(Swoons).

சுந்தரி : அண்ணா ! அண்ணா !!—ஐயோ—எங்கே டாக்டர்—இன்னும் வரவில்லையா—.

ராமன் : இதோ—நானே போய் அழைத்து வருகிறேன்.

ஆநந்த : ராமு—ஆ—சிரமபரிகாரமா—இனி.

V. Mudr. (With a look of concern) கவலை தோன்றிய முகத்துடன். கிருஷ்ணஸாமி ! நீ செய்துள்ள அனர்த்தத்தைப் பார்த்தனையா—பெருமைப் பேயினால் தூண்டப்பட்டு உன் ஆப்த்த நேயர்களை அவமதித்து அவர்களுக்கு சேதம் வித்ததல்லாமல் ஆனந்த ராவின் உயிருக்கே ஆபத்து பிணைவித்திருக்கிறாய். ஆநந்த ராவ் இறந்தால் அந்தப்பழி உன் தலைமேல் தான்.

கிருஷ்: ஐயா—இவ்வளவு அநியாம் நடக்குமென நான் எதிர் பார்க்கவில்லையே. நான் யாரையும் ஏவவில்லையே—ஆநந்தராவை அடிக்கச் சொல்லி—வண்ணன்கள் செய்த அக்ரமத்திற்கு நான் ஜவாப்தாரியல்ல.

பரபரப்புடன் டாக்டர், ராமனுடன் நுழைந்து ஆநந்தராவை சோதிக்கிருர்,

[enter Doctor Hurriedly with Raman and examines Ananda Rao].

டாக்டர்: Oh Yes! இவருக்கு இன்னும் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ப்ரக்ஞை வந்துவிடும்—இவர் தப்பித்தது, ஏதோ இவர் அதிர்ஷடந்தான் என்று சொல்லவேண்டும். நல்ல வேளையாய் Skull is not fractured (கபாலம்) உடையவில்லை விழுந்த அடி கொஞ்சம் அப்படித் தள்ளி விழுந்திருந்ததோ உடனே மாணம் (death) ஆயிருக்கும் காயம் கொஞ்சம் பலமாய்தான் பட்டிருக்கிறது. ஆனல் உயிருக்கு ஆபத்து இல்லை. இப்பொழுது ஒரு ஊசியில் மருந்து (Injection) கொடுக்கிறேன் இவருக்கு சரியானபடி ஓய்வு (Rest) எடுத்துக்கொண்டால் இரண்டு வாரங்களில் சௌகர்யமாகிவிடும்.

சுந்தரம்: சுந்தரி—அப்பா நல்ல வேளை தெய்வானுக்ரஹத்தால் அவருக்கு ஆபத்து ஒன்றும் இல்லை—

[டாக்டர் ஓர் இஞ்செக்ஷன் கொடுக்கவும் (Doctor gives an injection) ஆநந்தராவ் கண் விழித்துப்பார்த்து, சுந்தரம் (Ananda Rao who recovering beckons Sundaram and Sundari to go near) சுந்தரியை அருகே அழைக்கிருர் ஆனந்த ராவ். Krishnaswami now greatly relieved to find Ananda Rao reviving rushes to Ananda Rao இறந்துவிடுவாரோ எனப் பயந்த கிருஷ்ணசாமி பெருமூச்செரிந்து ஆனந்தராவிடம் விரைந்து சென்று].

கிருஷ்: அண்ணு—அறிவிழந்து அபாத செய்கையை செய்தேன்—பொருமை வசப்பட்டு உங்கள் கூட்டுறவு சங்கத்திற்கும் உலை வைக்க வழிதேடினேன். என் ஈகைச்செய்கையை க்ஷமித்து அனுக்ரஹிக்கவேண்டும்.

ஆநந்த: கிருஷ்ணசாமி — உன் ஆப்த்த நண்பர்களான சுந்தரம், சுந்தரி முதலியோருடைய மனதை புண்படுத்தியிருப்பது

தான் எணக்கு நீ இழைத்த சரீர ஹிம்சையிலும் பெரிது. நீ அவர்களுடைய மன்னிப்பை யன்றோ கோறவேண்டும்.

கிருஷ்: உங்களெல்லோருடைய பெருந்தன்மையும் போற்றதக்கதே இதுவே கூட்டுறவு முறமையால் கிட்டிய நற்பயன்போலும்—என் செய்கையின் இழிவை யறிந்தேன். கூட்டுறவு சங்கத்தின் ஒப்புயர்வற்ற உன்னத நோக்கத்தையும் உணர்ந்தேன்—.

ஆநந்: நல்ல ஆனந்த வேலையிது குழந்தாய்—கிட்டு உன்னை மன்னித்தேன் மனமார—சுந்தரி—சுந்தரம் நீங்களும் கிருஷ்ணசாமியை மன்னிக்கலாகாதா—ஏதோ விதிவசத்தால் எனக்கு ஒரு சிறிய ஆபத்து நேர்ந்தாயினும், அதன் வினையாக கட்டுக்கடங்காத கிருஷ்ணசாமி ஒரு வழிபட்டு, கூட்டுறவு சங்கத்தை ஆதரிக்கிறான் என்பது சுபசாமாசாரம் அல்லவா—பழைய ஸ்நேகத்தையும்முன்னிட்டு மன்னித்துவிடுங்களேன்–kneeling (முழந்தாளிட்டு).

கிருஷ்: உங்களுடைய இந்த உன்னதச் செய்கையை என்னும் மறவேன்—என் வாழ் நாட்களை—இனி—கூட்டுறவு சங்கத்திற்கு ஊழியம் செய்வதற்கே அர்பணம் செய்தேன்.

(கிஞ்ஷ்ணசாமியை தட்டிக்கொடுத்து).

சுந்தரம்: (Pats Krishnasami on the shoulder) எழுந்திருடா—கிருஷ்ணசாமி எனக்கும் சுந்தரிக்கும் நீ சங்கத்திலீடுபடுவதே சந்தோஷமான சமாசாரம்.

(கிருஷ்ணசாமி குனிந்த தலையுடன் எழுந்து).

(Krishnaswami gets up with bowed head).

ஆநந்த: சுந்தரி—சுந்தரம்—இங்கே வாருங்கள். (சுந்தரம், சுந்தரி இருவருடைய கைகளையும் இணைத்து) (they go near and Ananda Rao joins their hands) ஈச்வாக்ருபையால் நீங்களிருவரும் எண்ணளும், ஒரு மனதுடன்கூடி வாழவேண்டும்—இன்னளே—நன்னளாகும்—என்னைப்பற்றி நீங்கள் யாரும் கவலைப்படவேண்டிய அவச்யமே இல்லை—இப்பொழுது எனக்கு சரியாகப் போய்விட்டாற்போல் இருக்கிறது. சுந்தரம் சந்தரியை மணந்துகொள்ள இசைவதோடு கிருஷ்ணசாமியும் கூட்டுறவு சங்கத்தைத் தழுவுகிறான். மெல்லோருக்கும்—இன்பந்தரும்—நாளிது—சுந்தரி!—உம்—எங்கே நம்நம் கீதம்—சற்று கேட்போம்.—

[illegible]

[illegible] Kanakalingam [illegible]

[illegible]

[illegible] pats Krishnasami on the shoulder [illegible]

[illegible]

(Krishnaswami gets up with bowed h[illegible]

[illegible] they go ne[illegible]

[illegible]anda Rao joins their hands [illegible]

[illegible]

அனுபந்தம்.

காட்சி 4.

ஆநந்தராவ் — தனிமை.

கோச்சகக்கலிப்பா.

பாழாற குடும்பமேனும் பள்ளப் படுகுழியில்
ஆழாமல் ஆழ்ந்தே அறிவிழந்தேன் பொருளிழந்தேன்
வீழாதவன் காலில் வீழ்ந்து சுயமதிப் பிழந்தேன்
ஆழாழிச் சுழல்நடுவில் அகப்பட் டகலனேன்.

என்னென்பேன் எங்கிருப்பேன் யாரிடம் போய்க் குறைசொல்
தன்னந்தனிப் பேய்போல் தடுமாறிச் சாகின்றேன் [வேன்
பொற்றம் பலத்தானே புகலல்லால் வேறில்லேன்
முன்னென்றோ வினைசெய்தேன் மூண்டவினைத் துயரிதுவே.

காட்சி 13.

சுந்தரிபாடும் வாழ்த்து.

ஏழையர் செல்வர் என்னும் ஏற்றத் தாழ்வின்றி மேலாய்
மேழியர் வாழ்க மேலோர் விருப்பும் கூட்டுறவுச் சங்கம்,
ஆழிசூ ழுலகமெல்லாம் ஆன்றநல் லறம்போல் வாழ்க
தோழமை கொண் டுழைக்கும் தொழில்நலம் வாழ்க வாழ்க.

காட்சி 15.

கூட்டுறவுச் சங்கத்தைப்பற்றி கோபாலன் பாடுவது.

விருத்தம்.

(1) நாட்டினர் உறவைக் கூட்டும் நாணய நலத்தைக் காட்டும்
வாட்டமில் வாழ்வுமல்க வறுமையாம் பேயை யோட்டும்
போட்டியில் வணிக மோங்கப் பொறுமையை வளர்க்குந் தூயே
கூட்டுற வென்னுஞ் சங்கம் குவலயம் புகழத் தானே.

இதல்லாமலும்—

ஒருவர்க்குப் பல்லோர் நல்ல உதவிசெய் துவத்தல் கூடும்
இருவர்மேல் பல்லோர் கூடி ஒருவருக் குதவல் கூடும்
தருமநல் லுழைப்பில் நாளும் தகுபொருள் வளர்த்தல் கூடும்
பொருவில் கூட்டுறவுச் சங்கம் பூண்பதால் புவியல் தானே.

PRINTERS
THE
CENTRAL
CO-OPERATIVE
PRINTING
WORKS
LTD
MADRAS